வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை


Email : news@eelanadu.lk | மலர் : 03 | 23.08.2022 செவ்வாய்க்கிழமை | இதழ் : 259 | பக்கங்கள் : 16



வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழாவில் நேற்று திங்கட்கிழமை தங்கரதத்தில் முருகப்பெருமான் எழுந்தருளியபோது...! (படம் : ஐ.சிவசாந்தன்)

### சர்வதேச எதிர்ப்புகளையும் மீறி கைதான போராட்டக்காரர்களை

# பயங்கரவாத சட்டத்தில் தடுத்துவைக்க அனுமதி!



**கொழும்பு, ஓகஸ்ட் 23**

**பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட மூவரையும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்துவைத்து விசாரிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒப்புதல் அளித்துள்ளார்.**

ஐ. நா. மனித உரிமைகள், ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள் மற்றும் மனித உரிமைகள் ஆர்வலர்கள் எனப் பலரும் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்புக்களைத் தெரிவித்தனர்.

இந்நிலையிலேயே, கைதான அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே மற்றும் சிறி தம்ம தேரர், ஹசான் ஜீவந்த குணதிலக உள்ளிட்ட மூவரையும் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரிக்க பாதுகாப்பு அமைச்சுக்கு ஜனாதிபதி அனுமதியளித்துள்ளார்.

முன்னதாக, கடந்த 18ஆம் திகதி கைது செய்யப்பட்ட இந்த மூவரும் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் 72 மணி நேரம் கொழும்பு - பேலியகொடை பொலிஸ் நிலையத்தில்

15

## இலங்கையின் போக்கு கவலையளிக்கின்றது!

### ஐரோப்பிய ஒன்றியம்

பிரசெல்ஸ், ஓக. 23

அரசாங்கம் சமீபத்தைய கைதுகளில் பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்தியுள்ளமை குறித்து ஐரோப்பிய ஒன்றியம் கரிசனை வெளியிட்டுள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் ருவிட்டர் பக்கத்தில்,

"பயங்கரவாத தடைச் சட்டத்தை தற்போது பயன்படுத்துவதில்லை என இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய தகவலை

15

## மக்களின் கருத்து உரிமையை அரசு உறுதிப்படுத்த வேண்டும்!

### அமெரிக்கா வலியுறுத்து

கொழும்பு, ஓக. 23

மக்களின் கருத்துக்களை வெளியிடும் உரிமையை இலங்கை அரசு உறுதிப்படுத்த வேண்டும். மேலும், சர்வதேச மனித உரிமைகளின் தரங்களுக்கு இணங்காத பயங்கரவாத தடுப்பு சட்டம் போன்ற சட்டங்களைப் பயன்படுத்துவது இலங்கையின் ஜனநாயகத்தை சிதைக்கிறது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அரசாங்கத்துக்கு எதிராக போராட்டங்களில்

15

## ஜனாதிபதிக்கு பீரிஸ் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 23

அரசுக்கு எதிரான போராட்டக்காரர்கள் மீது தொடரும் அடக்குமுறை குறித்து ஜனாதிபதி மற்றும் ஆளும் கட்சிக்கு பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவசரகாலநிலை மீண்டும் அமுல்படுத்தப்படமாட்டாது என ஜனாதிபதி அண்மையில் அறிவித்ததைச் சுட்டிக்காட்டிய ஜி.எல்.பீரிஸ், பயங்கரவாதக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டமை குறித்து கேள்வி எழுப்பினார்.

இவ்வாறான அடக்குமுறையானது ஜெனிவாவை தளமாகக் கொண்ட ஐக்கிய நாடுகளின் மனித

15

## புலம்பெயர்ந்தோர் பணிமனை தமிழர்களுக்கு மட்டுமானதல்ல!

### ஜனாதிபதியின் ஆலோசகர்

கொழும்பு, ஓக. 23

புலம்பெயர்ந் தோருக்கான பணிமனை புலம்பெயர்ந்த தமிழர்களுக்காக மாத்திரம் அமைக்கப்படாது. அது புலம்பெயர்ந்த சகல இனத்தவர்களுக்கு மானது என்று கூறியுள்ளார் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு விவகாரங்களுக்கான ஆலோசகர் சாகல ரட்நாயக்க.

மேலும், இந்தப் பணிமனையை அமைக்கும் பேச்சு ஆரம்ப கட்டத்திலேயே உள்ளது எனவும் அவர் தெரிவித்ததுடன், முதலீடு மற்றும்

15

## ஜனாதிபதி ரணிலுடன் சஜித் மீண்டும் சந்திப்பு

கொழும்பு, ஓக. 23

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று மீண்டும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இதன்போது, இருவரும் சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில் கருத்துக்களை பரிமாறினர் என்று ஐக்கிய மக்கள் சக்தி தரப்பு தெரிவித்தது.

15

## அரசை கண்டிக்கிறார் கரு

கொழும்பு, ஓக. 23

நாட்டில் நிலவும் நெருக்கடியை சமாளிக்க அரசாங்கம் ஏனைய அரசியல் மற்றும் சிவில் சமூக குழுக்களுடன் ஒருமித்த கருத்தை எட்டுவது இன்றியமையாதது என சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையில் வெவ்வேறு கருத்துக்களைக் கொண்ட அரசியல் மற்றும் சமூகக் குழுக்களை நசுக்கும் அரசாங்கத்தின் முயற்சிகள் அத்தகைய

15

## அம்பாந்தோட்டையிலிருந்து புறப்பட்டது யுவான் வாங் -5

கொழும்பு, ஓக. 23

சர்ச்சையை ஏற்படுத்திய சீனாவின் யுவான் வாங் - 5 கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்திலிருந்து நேற்று மாலை புறப்பட்டது.

இந்தக் கப்பல் பலத்த சர்ச்சைகளுக்கு மத்தியில் கடந்த 16ஆம்திகதி அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வந்தது. இந்து சமுத்திரத்தின் வடமேல் கடல் பகுதியில் செய்மதி மற்றும் ஆய்வு நடவடிக்கைகளை

15

## இந்திய மீனவர் 10 பேர் கைது!

கொழும்பு, ஓக. 23

இலங்கைக் கடல் பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் தமிழக கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகம் - தூத்துக் குடியில் இருந்து வந்த

15

## நல்லூர் திருவிழா கண்காணிப்பில் நீல உடை மாநகர சபை ஊழியர்கள்

### முதல்வர் மணிவண்ணன் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக. 23

நல்லூர் பெருந்திருவிழாவில் வீதி ஒழுங்குகளை கண்காணிக்கும் பணியில் யாழ். மாநகர சபையின் விசேட அணி ஈடுபடும். நீல நிற உடை அணிந்த இந்த ஊழியர்களுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று யாழ். மாநகர சபையின் முதல்வர் வி. மணிவண்ணன் கேட்டுள்ளார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்படி தெரிவித்த அவர், நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில் ஆலயத்துக்கு பக்தர்களின்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

நண்பர் ஒருவர் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் இருந்து போன் பண்ணினார். ஏதேனும் தேவைக்கு மாத்திரமே பேசுபவர் அவர். அவசியமில்லாமல் பேசமாட்டார் என்பதால் அவரின் அழைப்பை நிராகரிக்க முடியவில்லை.

பதிலளித்ததும் ஒரு கதை ஒன்று உங்களுக்கு சொல்ல வேண்டும் என்றார்.

கதை கேட்பதென்றால் எனக்கும் அலாதிப் பிரியம் தானே. "சொல்லுமன் கேட்பம்" என்றேன்.

சில மாதங்களுக்கு முன்னர் நடந்த சம்பவம் அது என்று தொடர்ந்தார் நண்பர்.

அப்போதுதான் அது உண்மைச் சம்பவம் தொடர்பான கதை என்பது புரிந்தது.

"பாரிஸில் வாழ்ந்துவிட்டு இப்போது இலங்கையில் நிரந்தரமாக வாழ்ந்துவரும் நண்பர் ஒருவர் கொழும்பிலிருந்து பாரிஸ் வந்திருந்தார்.அவரை பாரிஸ் நகரத்திலுள்ள லா சப்பல் என்ற இடத்தில் இருக்கும் நம்மவர் உணவுச்சாலை ஒன்றுக்கு அழைத்துச் சென்றிருந்தேன்.

லா சப்பல் என்றால் அது பாரிஸிலுள்ள ஒரு குட்டி யாழ்ப்பாணம் என்பார்கள். மா இலையிலிருந்து தென்னம் குருத்துவரை என்ன தேவையோ எல்லாம் கிடைக்குமிடம் இது.

அங்குள்ள அந்த உணவுச்சாலைக்குள் நாங்கள் இருவரும் நுழைந்தோம். உள்ளே நேரே குசினிக்குள் வேலை செய்துகொண்டிருந்த ஒருவர் எங்களைக் கண்டுவிட்டு வெளியே வந்தார்.

கொழும்பிலிருந்து அந்த நண்பர் வந்ததை கண்டதும் அவர் "தனக்குத் தெரிந்த சிங்களத்தில் கதைத்துக் கொண்டே குசினிக்குள் இருந்து வெளியே வந்த அந்த நண்பர் எங்களை நோக்கி வர.... அங்கே ஒரு பிரளயமே நடந்துவிட்டது.

அப்போது அங்கே சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒரு பிரான்ஸ் புலம்பெயர் தமிழர், தான் சாப்பிட்டுக் கொண்டிருந்த தட்டை தூக்கி மேலே எறிந்தவாறே எழும்பி வெளியே போனார். அவர் வாயிலிருந்து வந்த வார்த்தைகளை இங்கே சொல்ல முடியாது. அத்தனை கேவலமான வார்த்தைகள். அவருக்கு கோபம் வந்ததற்குக் காரணம் வேறு ஒன்றுமில்லை, அந்த உணவகத்தில் வேலை செய்கின்ற ஒருவர் சிங்களத்தில் கதைத்துவிட்டது தான் அவருக்குக் கோபம் வருவதற்குக் காரணம். "சிங்களத் துரோகிகள்..." என்று கத்தியவாறே அவர் வெளியேறிவிட்டார்.

எனக்கும் அந்த கொழும்பிலிருந்து வந்த நண்பருக்கும் மாத்திரமல்ல, குசினிக்குள் இருந்து சிங்களம் கதைத்தவாறு வெளியே வந்தவருக்கும் தூக்கிவாரிப்போட்டது.

இதுதான் அந்த பாரிஸ் நண்பர் தொலைபேசியில் சொன்ன கதை.

இந்தக் கதையை அவர் சொல்லி முடித்த பின்னர்தான் கேட்டேன், "இந்தக் கதையைச் சொல்வதற்காகத்தான் இவ்வளவு தூரத்திலிருந்து போன் எடுத்தீரா", என்று கேட்டேன்.

"ஓம்... ஓம்.." என்றவர் கூடவே, நேற்று முன்தினம் நீர் எழுதிய பத்தியைப் படித்த பின்னர்தான் இந்தக் கதையை உமக்குச் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன் என்றார்.

அப்போதும் எனக்கு ஒன்றும் புரியவில்லை. "என்ன சொல்கிறீர்கள் என்பது இப்போதும் எனக்குப் புரியவில்லையே என்றேன்."

"இல்லை, புலம்பெயர் தமிழர்களின் பிரதிநிதி தான்தான் என்று கூறிக்கொண்டு ஒருவர் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு பேட்டி கொடுத்தது பற்றி எழுதியிருந்தீர்கள். அந்தப் பேட்டியைக் கொடுப்பவருக்கு நன்றாக சிங்களம் பேசத் தெரிந்தது மட்டுமே அவருக்கு இருக்கும் தகுதி என்றும் முடித்திருந்தீர்கள். சிங்களத்தை பேசக்கூடிய ஒருவர், அதுவும் சிங்களத்தில் பேசிக்கொண்டு, தான்தான் புலம்பெயர் தமிழர்களின் பிரதிநிதி என்றும் கூறுகிறார் என்றால் எப்படி", என்று திரும்பக்கேட்டார்.

அப்போதுதான் எவர் என்ன சொல்ல வருகின்றார் என்பது புரிந்தது.

சிங்களம் பேசுகின்றவர்களையே துரோகிகளாகப் பார்க்கின்ற புலம்பெயர் சமூகத்தின் பிரதிநிதி நான்தான் என்று கூறிக்கொண்டு ஒருவர் சிங்களத்தில் அதுவும் சிங்களவர்கள் போலவே பேசிக்கொண்டு கொழும்பில் திரிகின்றார் என்று சொல்லியவாறு சிரித்த அந்த நண்பர், அங்குள்ளவர்களுக்கு இவையெல்லாம் எங்கே தெரியப்போகின்றது.

ஏதோ புலம்பெயர் தமிழர்களை வைத்துக்கொண்டு அவரும் தன் காலத்தைக் கடத்தட்டுமே என்று கூறிவிட்டு தொடர்பைத் துண்டித்துக்கொண்டார் நண்பர்.

- ஊர்க்குருவி.

# யாழ்ப்பாணத்தில் இருந்து மேலும் எண்மர் மண்டபம் முகாமில் தஞ்சம்



சென்னை, ஒக. 23

தொடரும் பொருளாதார நெருக்கடியால் மேலும் 8 இலங்கை தமிழர்கள் அகதிகளாக நேற்று திங்கட்கிழமை அதிகாலை தனுஷ்கோடியை சென்றடைந்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அங்குள்ள மக்கள் உணவு பொருட்கள், அத்தியாவசிய தேவைகளுக்காக கடும் சிரமத்துக்கு ஆளாகி உள்ளனர். இதனால் கடந்த மார்ச் மாதத்திலிருந்து இலங்கையில் இருந்து 141 இலங்கை தமிழர்கள் தனுஷ்கோடிக்கு அகதிகளாக சென்றுள்ளனர்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த கார்த்திக், ரத்தினம், கீதா குமாரி, அவரகளது குழந்தைகள் என ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேர் மற்றும் மன்னாரைச் சேர்ந்த சாகுல் ஹமீது ஒருவர் என மொத்தம் 8 பேர் மன்னாரில் இருந்து படகு மூலம் புறப்பட்டு நேற்று திங்கட்கிழமை அதிகாலை தனுஷ்கோடி பாலம் அருகே இறங்கினர்.

தனுஷ்கோடி சென்ற இலங்கை தமிழர்கள் தாங்களாக ஒட்டோவில் ஏறி மண்டபம் மரைன் காவல் நிலையத்துக்கு சென்றனர்.

இதனை அடுத்து மண்டபம் மரைன் பொலிஸார் நடத்திய விசாரணையில் இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக தற்போது அத்தியாவசிய பொருட்கள் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் வாழ வழியின்றி உயிரை காப்பாற்றி கொள்ள தமிழகத்திற்கு அகதிகளாக வந்ததாகவும், தாங்கள் அனைவரும் 1990 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற போரின் காரணமாக தமிழகத்திற்கு அகதியாக வந்து குடியாத்தம் முகாமில் பதிவில் தங்கி இருந்து மீண்டும் இலங்கைக்கு சென்றதாகவும் தெரிவித்தனர்.

மத்திய, மாநில உளவுத்துறை அதிகாரிகள் விசாரணைக்குப் பிறகு 8 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்பட உள்ளனர். மேலும் தமிழகத்திற்கு இலங்கையிலிருந்து சென்ற அகதிகளின் எண்ணிக்கை 149 ஆக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (அ)

## வெளிநாடுகளுக்கு செல்வோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிப்பு

கொழும்பு, ஒக. 23

இந்த வருடம் 140,000 இற்கும் அதிகமான இலங்கையர்கள் வெளிநாடுகளில் வேலைக்காக சென்றுள்ளனர் என வெளிநாட்டு வேலை வாய்ப் புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் மூன்று இலட்சம் இலங்கையர்களை வேலை வாய்ப்புகளுக்காக வெளிநாட்டுக்கு அனுப்புவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் செயலாளர் தெரிவித்தார். (அ)

## மீன் விலை கடுமையாக உயரும்!

கொழும்பு, ஒக. 23

மண்ணெண்ணெய் விலை தற்போது 340 ரூபாவாக அதிகரித்துள்ளமையினால் மீன்களின் விலை கடுமையாக உயரும் என மீன் வியாபாரிகள் கூறுகின்றனர்.

மீன்பிடிப் படகுகள் பெரும்பாலும் மண்ணெண்ணெயை எரிபொருளாகப் பயன்படுத்துவதால், லீற்றர் ஒன்றுக்கு 253 ரூபாவாக அதிகரிக்கப்பட்டதன் பின்னர், அதே விலை மீன்களுக்கும் சேர்க்கப்படும் என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஒரு கிலோ மீனின் விலை 5000 ரூபாவைத் தாண்டும் என பேலியகொடை மீன் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பினால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு விலை நிவாரணம் வழங்குவதற்கு எதிர்பார்ப்பதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். அதன்படி, மீனவர்கள், தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் மண்ணெண்ணெயில் வேலை செய்பவர்களுக்கும் விலை நிவாரணம் வழங்கப்படும் என்று அவர் கூறினார். (அ)

## தரிசு நிலங்களில் பயிர்ச்செய்கை

கொழும்பு, ஒக. 23

பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப்படாமல் இருக்கும் வயற்காணிகளை பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் 1,05,000 ஏக்கர் காணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன என விவசாயத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தக் காணிகளை பெரும்போகத்தில் பயன்படுத்தும் வேலைத்திட்டத்தினை விவசாய அமைச்சு முன்னெடுத்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை, அம்பாறை, அனுராதபுரம், மட்டக்களப்பு, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 21500 ஏக்கர் தரிசு நிலங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது எனவும் விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# அலரி மாளிகையில் சொத்துக்களை அபகரித்தமை குறித்து 8 பேர் கைது!

கொழும்பு, ஒக. 23

அலரி மாளிகை மற்றும் ஜனாதிபதி அலுவலகத்துக்குள் நுழைந்து சொத்துக்களை அபகரித்தமை மற்றும் அமைச்சர்களின் வீடுகளுக்கு தீ வைத்த சம்பவங்கள் குறித்து தேரர் ஒருவர் உட்பட 08 பேர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த மாதம் 9 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்துக்குள் நுழைந்து சொத்துக்களை சேதப்படுத்திய வழக்குகள் தொடர்பில் தேடப்பட்டு வந்த தேரர் உட்பட மூவர் கொழும்பு துறைமுக நகர பகுதியிலும் பொத்துஹெர மற்றும் நுகேகொடை பிரதேசத்திலும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களுள் கொழும்புத்துறைமுக நகர் வேலைத்தளத்தில் பணிபுரியும் 26 வயதுடைய ஊழியர் ஒருவர் மற்றும் 24 வயதான பொத்துஹெர பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றில் வசித்து வரும் தேரர் ஒருவரும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நுகேகொடை பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கொதடுவ பிரதேசத்தில் வைத்து 53 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், வெலிக்கடை பண்டாரநாயக்கபுர பிரதேசத்தில் அலரி மாளிகையில் சொத்துக்களை திருடிய 60 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அலரி மாளிகையில் இருந்து 07 பித்தளை ஆபரணங்களும், பெரிய அளவிலான பயணப் பையும் திருடப்பட்ட நிலையில் சந்தேகநபரிடம் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

ஈழநாடு
Eelanadu
22.08.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், ஆவணி 06

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# அமெரிக்க தூதுவரின் நம்பிக்கை?

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், இலங்கை தற்போதைய நெருக்கடியிலிருந்து மீளுமென்று நம்பிக்கை தெரிவித்திருக்கின்றார் அதேவேளை, இலங்கை அரசாங்கம் வெகுசன கவர்ச்சிக்கு மாற்றான புதிய விடயங்களை செய்யத் தயங்கக் கூடாதென்றும் தெரிவித்திருக்கின்றார். அதாவது, வழமையான நடவடிக்கைகளுக்கு மாறாக, நாட்டின் மீட்சிக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தயங்கக்கூடாதென்று குறிப்பிட்டிருக்கின்றார்.

2005இல் அப்போது ஆட்சியிலிருந்த ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தலைமையிலான, அமெரிக்க குடியரசு கட்சி நிர்வாகம், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை அதிகாரத்துக்குக் கொண்டுவருவதில் அதிக ஆர்வத்தை வெளிப்படுத்தியிருந்தது. அப்போது, அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலராக இருந்த ரிச்சர்ட் ஆமிட்ரேஜ் இது தொடர்பில் பிரத்தியேக ஈடுபாட்டைக் காண்பித்திருந்தார். ரிச்சர்ட் ஆமிட்ரேஜ் அப்போது “இலங்கை அலுவலகர்“ என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள வட்டாரங்களில் வர்ணிக்கப்படுமளவுக்கு, இலங்கை விடயங்களில் அதிக ஆர்வத்தைக் காண்பித்திருந்தார். ஆனால், தமிழ் மக்களின் தேர்தல் பகிஷ்கரிப்பால் நிலைமைகள் தலைகீழாயின. மகிந்த ராஜபக்ஷ சொற்பளவான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றார். விடுதலைப் புலிகள் தொடர்பில் மேற்குலகம் கடும் அதிருப்திக்கு உள்ளானது.

2009இல் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து மகிந்த ராஜபக்ஷ, தென்னிலங்கையின் வெகுசன கவர்ச்சிமிக்க தலைவரானார். விடுதலைப் புலிகளை யுத்தத்தில் தோற்கடித்தவர்கள் என்னும் புகழுடன் சிங்கள தேசியவாதம் எழுச்சியுற்றது. அந்த எழுச்சியின் நாயகனாக மகிந்த ராஜபக்ஷ விளங்கினார். இவ்வாறானதொரு பின்னணியில்தான், 2015இல் பரந்த கூட்டணி வேலைத்திட்டம் ஒன்றின் ஊடாக, மகிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டார். இதன் பின்னால் இந்திய மற்றும் அமெரிக்க சதியிருந்ததாகவே மகிந்த ராஜபக்ஷ பிரசாரம் செய்தார்.

2015 ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து, ரணில் விக்கிரமசிங்க மீளவும் தென்னிலங்கை அரசியலில் அதிகாரமுள்ளவராக வெளியில் வந்தார். ஆனாலும் ரணில் - மைத்திரி மோதல், ஈஸ்டர் குண்டு தாக்குதல் ஆகியவற்றால் மீளவும் ரணில் விக்கிரமசிங்க பின் வரிசைக்கு செல்ல நேர்ந்தது.

சஜித் பிரேமதாஸவின் உடைவைத் தொடர்ந்து, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அதலபாதாளத்துக்கு சென்றது. 2020 பாராளுமன்ற தேர்தலில் ஒரு தேசிய பட்டியல் ஆசனத்துடன் ரணிலின் அரசியல் முடங்கிப் போனது. ரணிலின் அரசியல் வாழ்வு அஸ்தமனமாகிவிட்டதாக அனைவருமே நம்பினர். ஆனாலும் எவரும் எதிர்பாராத வகையில் பொருளாதார நெருக்கடியும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் நெருக்கடியும் ரணில் விக்கிரமசிங்கவை மீளவும், தென்னிலங்கையின் அரசியல் ஆட்டத்தில் தவிர்க்க முடியாதவராக்கியிருக்கின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில்தான், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தொடர்பில் அமெரிக்கத் தூதுவர் நம்பிக்கை வெளியிட்டு வருகின்றார். 2005இல் குடியரசு கட்சி நிர்வாகம் காண்பித்தது போன்றதோர் ஆர்வத்தை தற்போதைய ஜனநாயக கட்சி நிர்வாகம் காண்பிக்குமா என்னும் கேள்விக்கு - ஆம், என்று பதிலளிக்க முடியாது. அதேவேளை, இல்லையென்றும் பதிலளித்துவிட முடியாது. ஏனெனில், அமெரிக்காவின் உலகளாவிய அணுகுமுறையென்பது, ஜனநாயக மற்றும் குடியரசு கட்சிகளின் ஆர்வத்துக்குள் அடங்கும் ஒன்றல்ல. அமெரிக்காவில் கட்சிகள் என்பவை வெறும் கருவிகள் மட்டும்தான். எனவே, கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை ரணில் விக்கிரமசிங்க எவ்வாறு பயன்படுத்திக் கொள்வார் என்பதில்தான் அவரின் அரசியல் நகர்வுகள் மட்டுமல்ல - அவரில் முதலிடலாமாவென எண்ணிக் கொண்டிருப்பவர்களின் அடுத்தகட்ட அரசியல் நகர்வுகளும் தங்கியிருக்கின்றன.

# “கோட்டா - ரணில் டீல்” அரசு !

**அலசுவது இராஜதந்திரி**



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கு இன்னும் ஒரு சில வாரங்களே இருக்கின்ற நிலையில் இலங்கை மீது உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு சர்வதேச ரீதியாக கோரிக்கைகள் வலு வடைந்து வருகின்றன.

இந்தக் கோரிக்கைகளில் பிரிட்டனின் பிரதமர் பதவிக்கான வேட்பாளரான இந் தியாவை பூர்வீகமாகக்கொண்ட ரிஷி சுனக் மற்றும் அமெரிக்க காங்கிரஸின் பத்து உறுப் பினர்கள் விடுத்துள்ள கோரிக்கைகள் குறிப் பிடத்தக்கவையாகும்.

இதுதவிர, தமிழ்த் தேசிய தளத்தில் உள்ள அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப் புகள் கூட்டிணைந்து ஐக்கிய நாடுகள் ஸ்தா பன உறுப்பு நாடுகளுக்கு இலங்கையில் மனித உரிமைகள் மீறல்கள் குறித்து கடிதம் அனுப் பவும் முன்வந்துள்ளன.

இலங்கையின் ஆட்சியாளர்களால் அடிப் படை மனித உரிமைகள் நாடளாவிய ரீதியில் மீறப்பட்டுள்ளமை தற்போது தெளிவாகியுள் ளது. இலங்கையில் பொருளாதார நெருக்கடி மற்றும் அதுசார்ந்த அடிப்படை மனித உரி மைகள் மீறல்கள் என்பவற்றை முழு உலகுக் குமே வெளிச்சம் போட்டுக்காட்டுவதாக அண்மையில் கொழும்பு காலி முகத்திடலில் இடம்பெற்றிருந்த ஆர்ப்பாட்டம் எடுத்தியம் பியிருந்தது. 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கு - கிழக்கு யுத்தம் இடம்பெற்ற போது அடிப்படை மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்படுகையில் பயங்கரவாதமே வடக்கு - கிழக்கில் இழையோடியுள்ளது என்ற ரீதியில் தென்னிலங்கையர்களின் கவனத்தை திசை திருப்பியிருந்தனர் இலங்கையின் ஆட்சி யாளர்கள்.

ஆனால், வடக்கு - கிழக்கு யுத்தத்தைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி அரசியல் குளறுபடிகள், ஊழல், மோசடி என்பவற்றின் மூலமாக குளிர்காய்ந்த தென்னிலங்கை ஆட்சி யாளர்களின் முகத்திரை கிழிக்கப்பட்டு ஜனா திபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமராக இருந்த மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் ஆட்சிப்பொறுப்புகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தனர்.

“கோட்டா கோ ஹோம்“ என்ற ஆங்கில கோஷம் மூலமாக ஆட்சி அதிகாரங்களில் இருப்போர் இலங்கையில் மனித உரிமை களை பேணுவதில் தோல்வி கண்டுள்ள மையை சர்வதேச சமூகம் அறிந்துள்ளதையே இலங்கை குறித்து அண்மைக்காலங்களில் சர்வதேச சமூகத்திலிருந்து வெளிப்படுத்தப் பட்டுவரும் கருத்துக் கண்ணோட்டங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டம் கலைக் கப்பட்டுவிட்டதைத் தொடர்ந்து ஓய்ந்து விட்டதென்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்த ரணில் விக்கிரமசிங்க அரசு முனையலாம். ஆனால், தாய்லாந்திலிருந்து முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்ப உத்தேசித்துள்ளார் என்ற தகவல் வெளியானதையடுத்து மீளவும் கடந்த சில தினங்களாக கொழும்பில் ஆர்ப்பாட்டங்கள் தலைகாட்ட ஆரம்பித்துள்ளன.

இதனையடுத்து ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க முன்னாள் ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷவை தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு அவரின் கொழும்பு திரும்பும் எண்ணத்தைப் பிற்போடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.


ஏனெனில், கொழும்பில் காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டம் கலைக்கப்பட்டிருக்கலாம். ஆனால், நீறுபூத்த நெருப்பாகவே தற்போது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷமீதான அதிருப்தி அவருக்கெதிராக ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டோர் மத்தியில் காணப்படுகின்றது.

இந்நிலையில் மீளவும் கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பும் பட்சத்தில் அவ ருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் வலுவ டைவதோடு எதிர்வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடரில் அதன் பிரதிபலிப்பு பலமாகவே இருக்கும் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நன்கு உணர்ந்துள்ளார்.

தற்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் எழுப்பி வருகின்ற கோஷத்தின் வெளிப்பாடாக இருப்பது “ரணில் - கோட்டா டீல்” அர சாங்கம் என்பதேயாகும். அதாவது ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்கவுக்கும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையிலான புரிந்துணர்வின் அடிப்படை யிலேயே தற்போதைய அரசு இருந்து வருகின்றது என்பதே “ரணில்-கோட்டா டீல்” என்பதன் அர்த்தமாக உள்ளது.

எனவே, கடந்த காலங்களில் வடக்கு - கிழக்கு மக்களின் அரசியல் அபிலாஷைகள் குறித்த போராட்டங்களைப் பயங்கரவாதம் என்று புறக்கணித்து தென்னிலங்கையில் ஆட்சி அதிகாரங்களுக்கு வந்ததோரின் முகத் திரை அகற்றப்பட்டதையடுத்து முழு இலங் கையுமே தற்சமயம் அடிப்படை மனித உரிமை மீறல்களால் துவண்டு போயுள்ள தையே சர்வதேச சமூகத்திலிருந்து வெளிப் பட்டுவரும் இலங்கை குறித்த கண் ணோட்டங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஒகஸ்ட் - 23 செவ்வாய்க்கிழமை
சுபகிருது வருடம் - ஆவணி 07
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : துவாதசி




**மேடம்**
பொருள் சேர்க்கை உண்டாகும். ஆதாயமான நாள். எதிர்பாராத லாபம் உண்டாகும். பணவரவால் கடனை அடைத்து நிம்மதி காண்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.பொன் பொருள் சேர்க்கை சேரும்.

**இடபம்**
கவனமாக செயல்படுவது நல்லது. வரவு செலவுகளில் கவனம் தேவை. குடும்ப நலனில் அக்கறை அதிகரிக்கும். திட்டமிட்டு செயல்படுவீர்கள். பிள்ளைகளின் நலனுக்காக பாடுபடுவீர்கள்.

**மிதுனம்**
மகிழ்ச்சி அதிகரிக்கும். மனஅழுத்தம் குறையும். நீங்கள் விரும்பியதை அடைவீர்கள். வரவுகளால் மகிழ்ச்சி அதிகரிக்கும்.இனிய சம்பவம் நடந்தேறும். ஆதாயமும் அனுகூலமும் உண்டாகும்.

**கடகம்**
எதிர்பாராத செலவு உண்டாகும். பயணம், வரவு செலவில் எச்சரிக்கையும் கவனமும் தேவை.அரசு வழியில் நன்மை உண்டு. குடும்பத்தினர் மகிழ்ச்சிக்காக கூடுதல் செலவுகள் செய்வீர்கள்.

**சிம்மம்**
முயற்சிகளில் வெற்றி உண்டாகும். நண்பரால் நன்மை அதிகரிக்கும்.நீண்ட நாட்களாக வராமல் இருந்த பணம் வரும். தொழிலிருந்த சங்கடம் விலகும். லாப நிலை உண்டாகும். ஆதாயமான நாள்.

**கன்னி**
உழைப்பிற்குரிய மரியாதை உண்டாகும். வியாபாரத்தை விரிவு செய்வீர்கள். பொன் பொருள் சேரும். புதிய முயற்சி வெற்றி பெறும். குடும்பத்தில் நெருக்கடிகளை சரிசெய்வீர்கள். வரவால் மகிழ்வீர்கள்.

**துலாம்**
முயற்சிகளில் இழுபறி உண்டாகும். அரசு வழியில் பிரச்னைகள் உருவாகும். எச்சரிக்கை தேவை. எதிர்பார்ப்பு தள்ளிப் போகும். வம்பு வழக்குகள் சங்கடப்படுத்தும். சிரமங்கள் உண்டாகும்.

**விருச்சிகம்**
அலைச்சல் அதிகரிக்கும். எதிர்பார்த்தவற்றில் இழுபறி உண்டாகும். பயணத்தில் கவனம் தேவை. தேவையற்றப் பிரச்னைகள் தோன்றும். எதிர்பார்த்தவற்றில் நன்மை பெற முடியாமல் போகும்.

**தனுசு**
குடும்பத் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள். நண்பரால் நினைத்ததை சாதிப்பீர்கள். எதிர்பார்த்த வருமானம் வரும். எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**மகரம்**
முயற்சியில் இருந்த தடை விலகும். விரோதிகள் விலகுவர். எதிர்பார்த்த வரவு வந்து சேரும். சோர்வு விலகும். எதிர்பார்ப்பு எளிதாக நிறைவேறும். புதிய முயற்சியில் ஆதாயம் காண்பீர்கள்.

**கும்பம்**
பிள்ளைகள் நலனில் ஆர்வம் கூடும். முயற்சியில் தடை உண்டாகும். செலவு அதிகரிக்கும். குடும்பத்தினர் அதிருப்தி கொள்வர். செயலில் பின்னடைவு. பணவரவில் தடை ஏற்படும்.

**மீனம்**
அலைச்சல் அதிகரிக்கும். வேலை காரணமாக சிலர் வெளியூர் செல்வர். அரசு பணியில் கவனம் தேவை. எதிர்பாராத வேலையால் நெருக்கடி ஏற்படலாம். அதிகாரிகளுடன் அனுசரித்துப் போவது நல்லது. முயற்சியில் தடையை சந்திப்பீர்கள்.

# கே.கே.எஸ். - காரைக்கால் இடையே கப்பல் சேவை இந்த ஆண்டு ஆரம்பம்!

## புதுச்சேரி பட்ஜெட் அறிக்கையில் தகவல்

புதுச்சேரி, ஓக. 23

காரைக்கால் - இலங்கை இடையே பயணிகள், சரக்கு கப்பல் போக்குவரத்து நடப்பு ஆண்டில் தொடங்கப்படும் என்று புதுச்சேரி மாநில முதல்வர் ரங்கசாமி அறிவித்துள்ளார்.

புதுச்சேரி சட்டப்பேரவையில் அவர் சமர்ப்பித்த வரவு - செலவு திட்ட அறிக்கையிலேயே இந்த விடயத்தை அவர் முன்வைத்துள்ளார்.

அதில், காரைக்கால் துறைமுகம் இலங்கையில் அமைந்துள்ள காங்கேசன்துறைமுகம் இடையே பயணிகள், சரக்கு கப்பல் போக்குவரத்து இந்த ஆண்டு தொடங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# பெரும்புதூருக்கு வருகிறார் காங்கிரஸ் தலைவர் ராகுல்!

சென்னை, ஓக. 23

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை பாத யாத்திரை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார். எதிர்வரும் செப்ரெம்பர் 7ஆம் திகதி கன்னியாகுமரியில் பாத யாத்திரை தொடங்குகிறது.

இந்த நிலையில் சிறீபெரும்புதூரில் அவரது தந்தையும், முன்னாள் பிரதமருமான ராஜீவ் காந்தி நினைவிடத்துக்கு சென்று ராகுல்காந்தி அஞ்சலி செலுத்தவுள்ளார்.

சிறீ பெரும்புதூரில் உள்ள ராஜீவ்காந்தி நினைவிடத்துக்கு ராகுல் காந்தி முதன்முறையாக வரவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# அ.தி.மு.க. வழக்கு இன்று விசாரணைக்கு!

சென்னை, ஓக. 23

அ. தி. மு. க. பொதுக்குழு செல்லாது என்ற தனி நீதிபதியின் உத்தரவை எதிர்த்து எடப்பாடி பழனிசாமி தரப்பில் தாக்கல் செய்துள்ள மேன்முறையீட்டு வழக்கு இன்று விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

அ. தி. மு. க. பொதுக்குழுவை எதிர்த்து முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் தாக்கல் செய்த வழக்கில், "கடந்த ஜூலை 11-ம் திகதி நடந்த அ. தி. மு. க. பொதுக்குழு செல்லாது. அ. தி. மு. க வில் கடந்த ஜூன் 23-ம் தேதிக்கு முன்பு இருந்த நிலையே நீடிக்க வேண்டும்" என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

இதற்கு எதிராக உயர்நீதிமன்றில் எடப்பாடி பழனிசாமி வழக்கு தாக்கல் செய்தார். இதனை விசாரணைக்கு எடுப்பதா என்புது தொடர்பில் நேற்றைய அமர்வில் பரிசீலிக்கப்பட்டது.

வழக்கை விசாரிக்க ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் இன்று செவ்வாய்க்கிழமை வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படும் என்று அறிவித்தனர். (ஐ)

# பிறமொழி உதவியின்றி தமிழ் தனித்து இயங்கும்!

சென்னை, ஓக. 23

பிற மொழி உதவியின்றி தனித்து இயங்கக் கூடியது தமிழ் மொழி என்று தெரிவித்திருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின்.



செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் சார்பில், கலைஞர் மு.கருணாநிதி செம்மொழி தமிழ் விருதுகள் வழங்கும் விழா நேற்று நடைபெற்றது. இந்த விழாவில், கலந்து கொண்ட தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் விருதாளர்களுக்கு விருதுகளை வழங்கினார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய அவர், "பிற மொழி உதவியின்றி தனித்து இயங்கக்கூடியது தமிழ் மொழி. 3,000 ஆண்டு பழமை கொண்ட தமிழுக்கு செம்மொழி என்ற கௌரவத்தைப் பெற்று தந்து தி. மு. க. அரசுதான்.

கலைஞர் மு. கருணாநிதி செம்மொழி அறக்கட்டளை வாயிலாக ஆண்டுதோறும், தமிழறிஞர்களுக்கு கலைஞர் மு.கருணாநிதி செம்மொழி விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருது இந்தியாவிலேயே மிக அதிகளவு ரூ.10 இலட்சம் பரிசுத்தொகையும், பாராட்டுச் சான்றிதழையும் கலைஞர் மு. கருணாநிதியின் உருவம் பொறித்த நினைவுப் பரிசும் அடங்கியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாட்டில் தமிழருக்கே வேலை சட்டத்தை அரசு இயற்ற வேண்டும்!

## பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்து

சென்னை, ஓக. 23

தமிழ்நாட்டில் தனியார் நிறுவனங்களிலும் தமிழர்களுக்கு மட்டுமே வேலை சட்டத்தை இயற்ற வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று முன்தினம் அவர் தனது ட்விட்டர் பக்கத்தில், "தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு சபை நடத்தும் போட்டித் தேர்வுகளில் தமிழ் மொழி தகுதித் தேர்வு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் தமிழில் புலமை பெறாத வெளிமாநிலத்தவர் இனி தமிழகத்தில் ஆசிரியர் பணியில் சேர்வது தடுக்கப்படும். அரசின் இந்த நடவடிக்கை தாமதமானது என்றாலும் வரவேற்கத்தக்கது.

தமிழக அரசு பணிகளில் வெளிமாநிலத்தவர் சேர்வதை தடுக்க மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு, வனத்துறை சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் ஆகியவை நடத்தும் போட்டித் தேர்வுகளிலும் தமிழ் மொழி தகுதித் தேர்வு கட்டாயமாக்கப்பட வேண்டும்.

தமிழகத்தில் தனியார் நிறுவனங்களிலும் 80வீத பணிகள் தமிழர்களுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும். இது தொடர்பான தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் தமிழகத்தில் தனியார் வேலைகள் தமிழர்களுக்கே என்பதை உறுதி செய்ய அரசு சட்டம் இயற்ற வேண்டும்." என்று தெரிவித்தார்.

# பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதாக கூறி அரசியல் நெருக்கடியை உருவாக்கக்கூடாது!

## அரசிடம் வலியுறுத்துகிறார் சந்திரகுமார்



**கொழும்பு, ஓக. 23**

**ஜனநாயக ரீதியில் போராடுவோரை அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற அடக்குமுறைச் சட்டங்களால் சிறையில் அடைப்பது தவறு. அப்படிச் செய்தால் அது நாட்டில் மிக மோசமான எதிர் விளைவுகளையே உண்டாக்கும். பொருளாதார நெருக் கடியைத் தீர்ப்பதாகக் கூறிக் கொண்டு மறுவளத்தில் அரசியல் நெருக்கடியை உரு வாக்கக்கூடாது. அப்படிச் செய்தால் அதற்காக மிகப் பெரிய விலையை நாடு செலுத்த வேண்டியிருக்கும். கடந்த கால அனுபவத்தை மீட்டுப் பார்த்தால் இதனைப் புரிந்து கொள்ள முடியும் என சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப் பினருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் வெளி யிட்டுள்ள அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளதாவது:

ஜனநாயகப் போராட்டங்க ளுக்கு இடமளித்தால் வன் முறைச் செயற்பாடுகளோ அதற் கான சூழலோ உருவாகாது. ஆகவே அரசாங்கம் அத்தகைய தவறுகளுக்கு இடமளிக்காமல், செயற்படுவது அவசியமாகும். எனவே ஜனநாயக வழியில் போராடியோரைச் சிறையில் அடைத்துப் பழிவாங்குவதை விடுத்து உரியவர்களை உடன டியாக விடுதலை செய்யவேண் டும். அவர்கள் மக்கள் நிலை நின்று பகிரங்கமாக முன்வைத்த கோரிக்கைகளின் நியாயத்தன் மையைப் புரிந்து கொண்டு நாட்டின் நெருக்கடியைத்

தீர்ப்பதே மிகப் பொருத்த மான வழிமுறையாகும் என்று சமத்துவக் கட்சி கேட்டுள்ளது.

மிக வெளிப்படையான முறையிலேயே கொழும்பு நக ரில் 100 நாட்களுக்கும் மேலாக மக்கள் போராட்டம் நடை பெற்றது. இந்தப் போராட்டத் தில் பல்வேறு மக்கள் அமைப் புகளும் பல்லாயிரக்கணக்கான மக்களும் பங்குபற்றினர். தம் மால் தாங்கிக் கொள்ள முடி யாத பொருளாதார நெருக்கடி, அரசியல் நெருக்கடி போன்ற வற்றுக்குத் தீர்வு கிட்ட வேண் டும். அதற்கான ஆட்சிக் கட்ட மைப்பு வேண்டும் என்று கேட்டே மக்கள் போராடினர். அந்தப் போராட்டத்தின் விளைவே இன்றைய புதிய ஜனாதிபதியும் பிரதமரும் புதிய அமைச்சரவையும் ஆட்சிக்கட் டமைப்புமாகும். இந்தப் போராட்டம் தவறு என்றால் போராட்டத்தின் விளைவாக உருவாகிய இந்தப் புதிய ஆட் சிக் கட்டமைப்பும் தவறு என்று அர்த்தமாகி விடும். ஆனால், புதிய ஆட்சிக் கட்ட மைப்பை ஏற்றுக் கொண்டுள்ள ஜனாதிபதியும் ஆட்சியாளர்க ளும் அதற்கு வழிசமைத்த போராட்டத்தையும் போராட் டத்தை முன்னெடுத்தோரையும் தவறு எனச் சித்தரித்து அடக்கு வது பிழையானதாகும்.

எந்த மக்கள் போராட்டத் தின்போதும் மக்கள் மிக உணர்ச்சிகரவே செயற்படுவர் என்பது உலகளாவிய அனுபவ மாகும். அதுவே இங்கும் நிகழ்ந் துள்ளது. தாம் சந்திக்கின்ற நெருக்கடிகளுக்கு காரணமான ஊழல், அதிகார துஸ்பிரயோ கம், முறையற்ற திட்டமிடல்கள் போன்றவற்றுக்குப் பொறுப் புடையவர்கள் எனக் கருதியே சிலருடைய உடைமைகளை அவர்கள் அழிக்க முற்பட்டனர். இது தவறாக இருந்தாலும் மக்க ளுடைய இத்தகைய உணர்ச்சி நிலையின் தன்மை இப்படித்தா னிருக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். அதேவேளை இவை எதுவும் திட்டமிட்ட அடிப்படையில் தொடர்ச்சியாக நடைபெற வில்லை என்பதை இந்தச் சம் பவங்களைக் கூர்மையாக அவ தானித்தால் புரிந்து கொள்ள முடியும். ஆகவே மக்கள் போராட்டத்தின்போது நடந்த உணர்ச்சிகரமான விடங்களை அதே உணர்ச்சிகரமான நிலை யில் அரசாங்கமும் அணுக முற்படுவது பொருத்தமானது மில்லை.

புத்திசாலித்தனமானதும் அல்ல. அப்படிச் செய்தால் அது மேலும் பல நெருக்கடி களை உண்டாக்கும். இந்த அரசாங்கம் நெருக்கடிகளைத் தீர்ப்பதிலேயே அதிக கரி சனையைக் கொண்டுள்ளதாக நாம் நம்புகிறோம். அப்படியிருக்கும்போது அதற்கு எதிர்வளமாக எந்தக் காரணம் கொண்டும் நெருக் கடிகளை உருவாக்குவதாக எந்த நடவடிக்கையும் அமையக் கூடாது என்று வலியுறுத்துகி றோம். இதனைப் புரிந்து கொண்டபடியால்தான் ஜன நாயக ரீதியான போராட்டத்தை அடக்க வேண்டாம்.

ஒன்று கூடும் மக்களுடைய உரிமை, கருத்து வெளிப்பாட் டுச் சுதந்திரம் ஆகியவற்றுக்கு அச்சுறுத்தல் விடுக்கக்கூடாது என்று ஐ.நா மனித உரிமைகள்

ஆணையம் தொடக்கம் அனைத்துத் தரப்பினரும் தமது கண்டனங்களை தொடர்ச்சி யாக வெளிப்படுத்தி வருகின்ற னர். ஆகவே யதார்த்த நிலை மைகளைப் புரிந்து கொண்டு அரசாங்கம் நீதியாக, ஜனநாயக வழிமுறையில் நடக்க வேண் டும் என்று கேட்டுக்கொள் கிறோம்-என்றுள்ளது. (அ)

## பதுக்கி வைக்கும் முட்டை அரசுடமையாக்கப்படும்!

*கொழும்பு, ஓக. 23*

நிர்ணய விலைக்கு மேலதிக மாக முட்டை விற்பனை செய் தல் மற்றும் சட்டவிரோதமாக முட்டையை களஞ்சியப்படுத்து வோரை கண்டறிவதற்கான சுற் றிவளைப்பு நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பமானது.

வெள்ளை முட்டை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 43 ரூபாவாகும். பழுப்பு அல்லது சிவப்பு நிற முட்டை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 45 ரூபா என வர்த்தமானி அறிவித் தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்தையில் முட்டை விலை அதிகரித்துள்ள நிலையில் பதுக்கி வைக்கப்படும் முட்டைகளை அரசுடமையாக்குவதற்கு நடவ டிக்கை மேற்கொள்ளப்படும் என அமைச்சர் நளின் பெர் னான்டோ தெரிவித்துள்ளார்.

## உரம் இறக்குமதி செய்ய உலக வங்கி கட்டுப்பாடு!

*கொழும்பு, ஓக. 23*

அடுத்த போகத்திற்கான உரத்தை இறக்குமதி செய்யும் போது ஊழல் மற்றும் மோசடி களின்றி அதனை முன்னெடுக்க வேண்டும் என உலக வங்கி வலியுறுத்தியுள்ளது. இதன் பிர காரம் கடுமையான விதிமுறைக ளின் கீழ் சர்வதேச விலைமனுக் கள் கோரப்பட்டுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது. உலக வங்கியின் வழிகாட் டலின் பிர காரமே அனைத்து செயற்பாடுக ளும் முன்னெடுக்கப்படுகின்றன.

கொள்முதல் செய்கின்ற போது ஒப்பந்தக்காரர்கள் மற் றும் துணை ஒப்பந்தக்காரர் களின் அனைத்து கணக்குகள் மற்றும் ஆவணங்கள் உலக வங் கியின் பிரதிநிதிகளால் கணக் காய்வுக்கு உட்படுத்தப்படுகிறது.

கொள்முதல் செயற்பாட் டின் ஊடாக எதிர்வரும் பெரும் போகத்தற்காக 125,000 மெற் றிக் தொன் யூரியா இறக்குமதி செய்யப்படவுள்ளது. உலக வங் கியின் அவசர நிதி உதவியில் 110 மில்லியன் அமெ ரிக்க டொலர், உர இறக்குமதிக் காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




| வைப்பின் பெறுமதி (ரூ.) | காலஎல்லை (நாட்கள்) | வட்டிவீதம் (வ.வ) | வ.உ.வ |
|---|---|---|---|
| 500,000 - 1,499,999 | 200 | 20.5% | 21.54% |
| 1,500,000 - 2,499,999 | | 21.5% | 22.65% |
| 2,500,000 அல்லது அதற்கு மேல் | | 22.5% | 23.75% |







நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவத்தின் 21ஆம் நாள் காலை நேற்று கஜவல்லி மகாவல்லி உற்சவம் மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள் : ஐ.சிவசாந்தன்)

# சிறுபோக அறுவடைக்கு டீசல் பெற்றுத் தாருங்கள்

## கிளிநொச்சி விவசாயிகள் போராட்டம்

**கிளிநொச்சி, ஓக. 23**

**சிறுபோக அறுவடைக்கு டீசல் பெற்றுத்தருமாறு கிளிநொச்சியில் விவசாயிகள் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர். நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளி நொச்சி மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்து மகஜர் கையளிக்கச் சென்ற விவ சாயிகள், இவ்வாறு கவனயீர்ப்பிலும் ஈடுபட்டனர்.**





சிறுபோக செய்கை மேற்கொள்ளப்பட்டு, அறுவடை இடம்பெற்று வரும் நிலையில், அறுவடைக்கு தேவையான டீசலை விரைவாக பெற்றுத்தருமாறு தெரிவித்தே விவசாயிகள் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது அங்கு வருகை தந்த கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சிறிமோகன், விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.

இதன்போது, குறித்த விடயம் தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக பெற்றோலிய கூட்டுத்தாபனம் உள்ளிட்ட தரப்புடன் பேசி விரைவான நடவடிக்கை எடுப்பதாக அவர் விவசாயிகளிடம் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பில், அறுவடைக்கு தேவையான டீசல் கிடைக்காதவிடத்து, தாம் காலபோக செய்கையை மேற்கொள்ளப்போவதில்லை எனவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இரணைமடு விவசாய சம்மேளனத்தின் செயலாளர் சிவமோகன்-

சிறுபோக அறுவடை இடம்பெற்று வரும் நிலையில், தேவையான டீசல் கிடைக்கவில்லை. கடந்த சில நாட்களாக மாவட்டத்துக்கு டீசல் கிடைக்கப்பெறவில்லை. இந்த நிலையில் விவசாயச் செய்கைகளை கால்நடைகள் சேதமாக்கும் அபாயம் காணப்படுகின்றது.

இந்த நிலையில், குறித்த அறுவடையை விரைவாக மேற்கொள்ள வேண்டும். அதற்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சிறுபோகச் செய்கையை முழுமையாக நிறைவு செய்ய முடியாத எமது விவசாயிகள், காலபோகச் செய்கை தொடர்பில் பரிசீலிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்-என்றார். (அ)

# மண்ணெண்ணெய் விலை அதிகரித்தமைக்கு எதிர்ப்பு!

கொழும்பு, ஓக. 23

மண்ணெண்ணெயின் விலையை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சடுதியாக அதிகரித்துள்ள நிலையில், அதற்கு மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்யின் விலை 87 ரூபாவாக இருந்த நிலையில், நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் 253 ரூபாவால் விலை அதிகரிப்பு இடம்பெற்றது.

இதன்படி மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் புதிய விலையாக 340 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த விலை அதிகரிப்புக்கு மீனவர்கள் உட்படப் பல தரப்பினரும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

“சமையல் எரிவாயுவின் விலை 5 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது. எனவே, மண்ணெண்ணெய் அடுப்புதான் பயன்படுத்தி வந்தோம். தற்போது அதன் விலையும் உச்சம் தொட்டுள்ளது. மின்சாரக் கட்டணமும் அதிகரித்துள்ளதால், என்ன செய்வதென்று தெரியவில்லை” என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

மண்ணெண்ணெய் விலை அதிகரித்துள்ளதால், மீன் உள்ளிட்ட கடல் உணவு வகைகளின் விலைகளும் அதிகரிக்கப்படும் என்று வியாபாரத் தரப்பு தெரிவித்துள்ளது. (அ)

# எரிபொருள் வாங்குவதற்கு மக்களிடம் பணம் இல்லை!

கொழும்பு, ஓக. 23

தேசிய எரிபொருள் உரிமம் அல்லது கியூ.ஆர். முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் மக்களின் எரிபொருள் கொள்வனவு குறைவடைந்துள்ளது.

எரிபொருள் விலை அதிகரித்தமையே இந்த நிலைமைக்கு பிரதான காரணம் என பெற்றோல் நிலைய உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் குமார ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கியூ. ஆர் முறைமைக்கு ஏற்ப ஒரு காருக்கு வாரத்திற்கு 20 லீற்றர் பெற்றோல் கிடைக்கும். இதன்படி வாரம் 9,000 ரூபா வீதம் மாதம் 36,000 ரூபா தேவைப்படுவதனால் மக்களுக்கு அவ்வாறான செலவைச் செய்ய முடியாதுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# ஒரு வாரத்தில் மட்டும் 1500 பேருக்கு டெங்கு!

கொழும்பு, ஓக. 23

டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை வாரம் ஒன்றுக்கு 1500 ஆக அதிகரித்துள்ளது என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

இந்த வருடத்தில் இதுவரை டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சுமார் 50,500 என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்தில் அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும், கண்டி, காலி, இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் கணிசமான நோயாளர்கள் பதிவாகியுள்ளது எனவும் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

டெங்கு,கொரோனா மற்றும் இன்புளுவென்சா ஆகியவை இந்த நாட்களில் பரவி வரும் நிலையில், அறிகுறிகள் குறித்து அவதானமா இருக்குமாறும் மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் அவர் மக்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மூன்று நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால் முழுமையான இரத்தப் பரிசோதனையை மேற்கொள்வது அவசியம் எனவும் வைத்தியர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (அ)

# ரணில் அரசு நரகத்தின் இடைவெளியில் உள்ளது

## ரில்வின் சில்வா கூறுகிறார்

கொழும்பு, ஓக. 23

ரணில் தலைமையிலான அரசாங்கம் நரகத்தின் இடைவெளியில் உள்ளது. அந்த நரக இடைவெளியை விரைவில் முடித்து விடுவோம் என ஜே.வி.பி. பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நுகேகொடையில் நடைபெற்ற பேரணியில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கோட்டாபய வெளியேறி ரணில் வந்த பின்னர் போராட்டங்கள் இடைநிறுத்தப்பட்டன. அந்த இடைவெளியில் பொலிஸார் தடியடி நடத்த ஆரம்பித்துள்ளனர். அடக்குமுறை தலைத்தூக்க ஆரம்பித்துள்ளது.

நரகத்தின் இடைவெளியில் இருக்கிறீர்கள் என்பதை நாங்கள் அவர்களுக்குச் சொல்ல வேண்டும். இந்த இடைவெளி நீண்ட காலம் நீடிக்காது. மக்கள் படையின் தலைமையில் இந்த இடைவெளி மிக விரைவாக முடிவுக்கு கொண்டு வரப்படும்-என்றார். (அ)

# மண்ணெண்ணெய் விலை உயர்வால் பாதிக்கப்படும் தரப்புக்கு நிவாரணம்!

கொழும்பு, ஓக. 23

மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பால் பாதிக்கப்படும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள், மீன்பிடி மற்றும் பெருந்தோட்டத் துறைகளுக்கு, அதற்கு இணையாக நேரடி நிதி நிவாரணத்தை வழங்க அரசாங்கம் முன்வந்துள்ளது.

மின்சக்தி வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர ருவிட்டர் பதிவொன்றின் மூலம் இதனைத் தெரிவித்துள்ளார்.

மானிய விலையில் மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்பட்டமை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நட்டமடைவதற்குரிய ஒரு காரணியாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலையை 87 ரூபாவில் இருந்து 340 ரூபாவாக அதிகரித்துள்ளது.

இதன்படி, மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை, பழைய விலையிலிருந்து 253 ரூபாவினால் அதிகரித்துள்ளது. (அ)

# சுற்றுலாத்துறையை மேம்படுத்த ஏற்பாடு!

கொழும்பு, ஓக. 23

சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த வருடத்தில் 10 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தருவர் என நம்புவதாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார் .

இந்தியாவிலிருந்து பெருமளவு உல்லாசப் பிரயாணிகள் இலங்கைக்கு வருகை தருவார்கள் என எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ள அமைச்சர், இந்திய உல்லாசப் பிரியாணிகளுக்காக அதிக வாய்ப்புகள் பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

யாழ்.பலாலி விமான நிலையத்தின் மூலம் இந்திய யாத்திரிகர்கள் இலங்கைக்கு வருவதற்கு வாய்ப்புகள் செய்து கொடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போது நாட்டுக்கு தினமும் சுமார் 2000 சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதாகவும் அதனை 7000 ஆக அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

இந்திய உல்லாசப் பிரயாணிகளை அதிகளவில் இலங்கைக்கு அழைக்கும் வகையில் சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு பயணம் ஒன்றை அமைச்சர் இந்தியாவுக்கு மேற்கொண்டுள்ளார்.

(அ)

# ஹோட்டலில் துப்பாக்கி சூடு; இரண்டு பேர் உயிரிழந்தனர்

கொழும்பு, ஓக. 23

அம்பலாங்கொடை, தெல்துவ பகுதியில் உள்ள ஹோட்டலொன்றில் நேற்றிரவு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் இருவர் பலியாகியுள்ளனர்.

ஹோட்டலில் மது அருந்திக்கொண்டிருந்த நால்வரை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். காயமடைந்த ஏனைய மூவரும் பலப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர், மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தெற்கில் பாதாள குழுக்களுக்கிடையிலான மோதல் உச்சம் தொட்டு வருகின்றது. இதனால் தொடர் படுகொலைகள் அரங்கேறி வருகின்றன. இரு பாதாள குழுக்களுக்கிடையிலான மோதலே இந்த துப்பாக்கிச் சூட்டுக்கு காரண மென சந்தேகிக்கப்படுகின்றது. (அ)

# நாட்டை இருந்ததைவிட சிறந்த இடத்துக்கு கொண்டு செல்வதற்கு கிட்டியது வாய்ப்பு!

## கூறுகின்றார் துமிந்த திஸாநாயக்க

கொழும்பு, ஓக. 23

**“2015 இல் இருந்து இந்த நாளுக்காகத் காத்திருக்கிறோம். ஆனால் அன்று அதைச் சரியாகச் செய்ய முடியவில்லை. இன்று ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு, முக்கியமான அரசியல் நீரோட்டங்கள் ஒன்றாக இணைந்து, நாட்டை இருந்ததை விட சிறந்த இடத்துக்கு கொண்டு செல்லும் வாய்ப்பு கிடைத்துள்ளது.”**

- இவ்வாறு முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அநுராதபுரம் மாவட்டத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று எனக்கு மிகவும் மகிழ்ச்சியான நாள். பல முக்கியமான அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் இன்று ஒன்றாக இருக்கிறார்கள். 2015 இல் இருந்து இந்த நாளுக்காகத் காத்திருக்கிறோம். ஆனால், அன்று அதைச் சரியாகச் செய்ய முடியவில்லை. அப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து நாட்டை கட்டியெழுப்பும் ஆலோசனையை முன்வைத்த போதிலும் துரதிர்ஷ்டவசமாக அதனை நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கவில்லை.



ஆனால், விதியின் விளையாட்டால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைத் தாய்க்கட்சியாகக் கொண்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இன்று உங்களை ஜனாதிபதியாக நியமித்துள்ளது. நல்லவைகள் சிறந்த நேரத்தில் நடக்காவிட்டாலும், இன்று ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு, முக்கியமான அரசியல் நீரோட்டங்கள் ஒன்றாக இணைந்து, நாட்டை இருந்ததை விட சிறந்த இடத்துக்கு கொண்டு செல்லும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

நாம் வரலாறு பற்றி பேசிப் பயனில்லை. வரலாற்றை மறந்து அனைவரும் ஒன்றிணைந்து இந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். எத்தகைய தடைகள் வந்தாலும் நாடாளுமன்றத்தில் உங்களை வெற்றி பெறச் செய்தோம். இப்போது இந்த நாட்டைக் கட்டியெழுப்பவில்லை யென்றால், வேறொரு நாள் கிடைக்காது இதற்கு முன்னர் இந்த நாட்டைக் கட்டியெழுப்பக் கிடைத்த இரண்டு சந்தர்ப்பங்களை இழந்துள்ளோம். அது சுனாமிப் பேரழிவும், போர் வெற்றியுமே. இதுவே நம் வாழ்நாளில் கிடைத்த கடைசி வாய்ப்பு.

உங்களுக்கு நல்ல அனுபவம் இருக்கின்றது. நாங்கள் உங்களைக் கேலி செய்தபோதும், எதிர்க்கட்சியில் சேர்ந்து நீங்கள் கடினமாக பணியாற்றினீர்கள். அதனால்தான் ஒரு பிரச்சினை வரும் நேரத்தில், மற்றத் தலைவர்கள் புத்தகங்களைப் புரட்டும்போது, அந்தப் பிரச்னைகளுக்கும், எந்தக் கேள்விக்கும் உங்களிடம் பதில் இருக்கின்றது. போராட்டத்தின் மூலம் நாட்டில் மாற்றம் ஏற்படும் என நம்பிய இளைஞர் கூட்டம் இருந்தது. அரசியல் மாற்றம் மட்டுமின்றி அனைத்து துறைகளிலும் மாற்றத்தை எதிர்பார்த்தனர். இந்த மாற்றத்தை நாடே கோரியது, நாங்கள் அரசியல் ரீதியாகப் பிளவுபட்டிருந்ததால் இதை முன்னரே செய்ய முடியவில்லை-என்றார். (அ)

# நல்லூர் சூழலை அசுத்தப்படுத்துவோர் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும்

யாழ்ப்பாணம், ஓக. 23

நல்லூர் ஆலயத்துக்கு வருவோருக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்படுவோருக்கு எதிராக பொலிஸார் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



நல்லூர் ஆலயத்திற்கு மாலை வேளைகளில் வருவோரில் சிலரின் செயற்பாடுகள் பக்தர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக ஆலய வீதியில் அங்க பிரதிஷ்டை செய்யும் அடியவர்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

அங்க பிரதிஷ்டை செய்யும் வீதி சுத்தமாக இருக்க வேண்டும். பொறுப்பற்ற சிலர் வீதிகளில் உணவு மீதிகளை வீசி செல்கின்றனர். நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்திர மகோற்சவ திருவிழா வெகு சிறப்பாக நடைபெற்று வரும் நிலையில், மாலை திருவிழாவுக்கு வரும் சிலர் ஆலய வீதிகளில் தாம் உண்ட உணவுகளின் மீதிகள் , கச்சான் கோதுகள் , சுண்டலை சாப்பிட்ட மீதி பைகள் என வற்றை வீசி எறிகின்றனர். சிலர் அவற்றை மணல் மண்ணுக்குள் புதைத்தும் விடுகின்றனர். அதனால் ஆலய வீதிகள் அசுத்தமாக காணப்படுகின்றன.

ஆலய சுற்று வீதிகள் யாழ். மாநகர சபை சுத்திகரிப்புப் பணியாளர்களால் தினமும் இரவு வேளைகளில் சுத்தம் செய்யப்படுகின்றன .

அவ்வாறு அவர்கள் சுத்தம் செய்யும் போது வீதிகளில் வீசப்பட்ட கச்சான் கோது, மிகுதி உணவுடன் வீசப்பட்ட பைகள் என்பன மணலில் புதைத்து காணப்படுவதனால் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஆலய வீதிகளில் பெருமளவான குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ள போதிலும் , அவற்றுக்குள் அவற்றை வீசாது ஆலய வீதிகளில் வீசி செல்பவர்களால் பக்தர்கள் உள்ளிட்ட ஆலயத்துக்கு வருவோர் விசனமடைந்துள்ளனர்.

இதேவேளை, ஆலயத்துக்கு மாலை வேளைகளில் வரும் ஒரு சில இளைஞர் குழுக்கள் அதிக சத்தம் எழுப்பும் கோர்ன்களை மக்கள் மத்தியில் ஊதி செல்கின்றனர்.

வயதானவர்கள், குழந்தைகள் மத்தியில் அதிக ஒலி எழுப்பக்கூடிய அந்த கோர்ன்களை ஊதிச் செல்வதால் பலரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

அதேபோன்று கைக்குழந்தைகளுடன் சில பெண்கள் ஆலய சூழல்களில் யாசகம் பெற்று வருகின்றனர். அவர்களும் ஆலயத்துக்கு செல்வோருக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் யாசகம் பெறுகின்றனர்.

அத்துடன் ஆலயச் சூழலில் யாசகம் பெறும் சிலர் மதுபோதையில் யாசகம் பெற்று வருவதுடன் ஆலயத்திற்கு செல்வோருக்கு இடையூறுகளையும் விளைவித்து வருகின்றனர்.

இவ்வாறு ஆலயத்திற்கு வருவோருக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்படுவோருக்கு எதிராக பொலிஸார் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பலரும் கோரியுள்ளனர்.

எதிர்வரும் நாட்களில் விசேட திருவிழாக்கள் நடைபெறவுள்ளதுடன் எதிர்வரும் வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்த திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

ஆலயத்திற்கு புலம்பெயர் நாடுகள், வெளி மாவட்டங்கள் என பல்வேறு பகுதிகளில் இருந்தும் பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் ஆலயத்திற்கு வருகை தந்து நல்லூர் முருகனை தரிசிக்கவுள்ள நிலையில் பக்தர்களுக்கு இடையூறு விளைவிக்கும் நபர்களுக்கு எதிராக பொலிஸார் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஆலயச் சூழலை சுத்த மாக பேண உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பல தரப்பினரும் கோரியுள்ளனர். (அ)

# பொலித்தீன் மூலப்பொருள் தட்டுப்பாட்டால் நெருக்கடி

கொழும்பு, ஓக. 23

பொலித்தீன் மூலப்பொருள் இறக்குமதி நிறுத்தப்பட்டதன் காரணமாக அரிசி மற்றும் மரக்கறிப் பைகள் உற்பத்தி மற்றும் கொரோனா பாதுகாப்பு உடைகள் உற்பத்தி முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது என உற்பத்தி நிறுவன தொழிலதிபர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த நான்கு மாதங்களாக பொலித்தீன் மூலப்பொருள் இறக்குமதி செய்யப்படவில்லை என தெரிவித்த தொழிலதிபர்கள், விரைவில் வெளிச் சந்தையில் பிளாஸ்ரிக் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் எனவும் கூறினர்.

பொலித்தீன் மூலப்பொருள் இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளதாகவும், 200 முதல் 250 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ பொலித்தீன் மூலப்பொருள் தற்போது 1250 முதல் 1500 ரூபா வரை அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது .

டொலர் தட்டுப்பாடு காரணமாக கடந்த ஏப்ரல் மாதம் முதல் பொலித்தீன் மூலப்பொருள் இறக்குமதி செய்யப்படவில்லை என்றும், பொலிதீன் மூலப்பொருள் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு, மின்வெட்டு, சிறு மற்றும் நடுத்தர அரிசி ஆலைகள் மூடல் போன்ற காரணங்களால் ஏற்கனவே பல தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன என்றும் தொழில்துறையினர் கூறுகின்றனர்.

கொரோனா பேரிடரை எதிர்கொள்ள சுகாதார ஊழியர்களுக்குத் தேவையான கொரோனா பாதுகாப்பு உடைகள் பொலித்தீன் மணிகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுவதாகவும், எதிர்காலத்தில் நாட்டில் மீண்டும் கொரோனா தொற்று ஏற்பட்டால், அதற்குத் தேவையான ஆடை உற்பத்தி முற்றிலும் நிறுத்தப்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

(அ)

# ஜுலு ராஜ்ஜியம்!

## நாடும், அதிகாரமும் இல்லாத இந்த மன்னர் பதவிக்கு ஏன் இத்தனை சண்டை, இவ்வளவு பெருமை?



ஓராண்டு நீடித்த குடும்ப சண்டைக்குப் பிறகு, தென்னாப்பிரிக்காவில் நடந்த பாரம்பரிய விழாவில் மிசுசூலு கா ஸ்வெலிதினி ஜூலு மன்னராக முடிசூட்டப்பட்டார்.

ஜூலு என்பது தென்னாப்பிரிக்காவின் ஒரு பழங்குடி இனம். அதற்கென தனி நாடோ, எல்லையோ இப்போது இல்லை.

48 வயதான புதிய மன்னர், முந்தைய மன்னரின் மகன். ஆனால் அரச குடும்பத்தைச் சேர்ந்த பலர், அவர் முறையான வாரிசு இல்லை என்றும் மறைந்த மன்னரின் உயில் போலியானது என்றும் வாதிட்டனர்.

அவரது முடிசூட்டு விழா க்வாகாங்கேலமன்கெங்கனே அரண்மனையில் சனிக்கிழமை நடந்தது. ஏதோ எழுத்துப் பிழை என்று எண்ணிவிட வேண்டாம். ஆங்கிலத்தில் அந்த அரண்மனையை KwaKhangelamankengane என்றுதான் எழுதுகிறார்கள்.

முடிசூட்டு விழாவுக்காக ஆயிரக்கணக்கான மக்கள் கூடினர். விலங்குகளின் தோல்களில் தைக்கப்பட்ட பாரம்பரிய உடையை அணிந்தும், பாரம்பரிய ஆயுதங்களைத் தாங்கியபடியும் அவர்கள் வந்தனர்.

அங்கு மன்னர் தனது மூதாதையர்களின் ஆவிகளை அழைப்பதற்காக புனிதமான கால்நடைத் தொழுவத்துக்குள் நுழைந்தார். அங்கு என்ன நடந்தது என்பது மிகவும் ரகசியமானது. அரச குடும்பத்தைச் சேர்ந்த சிலர் மட்டுமே அங்கு செல்ல முடியும்.

முடிசூட்டு நிகழ்வின்போது அவரே வேட்டையாடிய சிங்கத்தின் தோலை மன்னர் அணிவார் என்று கூறப்பட்டிருந்தது. அவர் உண்மையிலே அரசராவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்பதை நிரூபிப்பதில் அது ஒரு முக்கிய சாதனையாகும். விழாவை முன்னிட்டு 10க்கும் மேற்பட்ட மாடுகள் வெட்டப்பட்டன.

அடுத்த மாதம், அவருக்கு தென்னாப்பிரிக்க அரசு மக்கள் மத்தியில் இன்னொரு முறை முடிசூட்டு விழா நடத்த அரசு ஏற்பாடு செய்துள்ளது.

**எந்த ராஜ்ஜியத்துக்கு இவர் மன்னர்?**

ஜூலு சிம்மாசனத்திற்கு முறையான அரசியல் அதிகாரம் ஏதும் இல்லை. தனியாக நாடு என்பதும் கிடையாது. ஆனால் தென்னாப்பிரிக்காவின் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினர் ஜூலு இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மத்தியில் மன்னருக்கு செல்வாக்கு எப்போதும் உண்டு.

ஜூலு இனத்தில் முடியாட்சியானது ஆண்டுக்கு 4.9 மில்லியன் அமெரிக்க டாலர்கள் அளவுக்கு வரி செலுத்தும் மக்கள் தொகையைக் கொண்டது.

ஜூலு ராஜ்ஜியம் கடந்த காலங்களில் ஒரு பெருமைமிக்க வரலாற்றைக் கொண்டுள்ளது. இது 1879-ஆம் ஆண்டு நடந்த இசண்டல் வானா போரின் போது பிரிட்டிஷ் படைகளை தோற்கடித்ததற்காக உலகப் புகழ் பெற்றது.

இந்தப் பெருமைக்காகவே இதன் மன்னராவதற்கு போட்டி கடுமையாக இருக்கும். வாரிசுப் போர்கள் கொடூரமாக நடக்கும். சில சமயங்களில் ரத்தக் களரியாகிவிடும்.

புகழ்பெற்ற மன்னர் ஷாகா கா சென்சங்கோனா 1816 -ஆம் ஆண்டில் அரியணையைக் கைப்பற்றுவதற்காக தனது சகோதரனைக் கொன்றார். அது அவருக்குமே நடந்தது. பல ஆண்டுகளுக்குப் பிறகு அவரது மருமகன் சூழ்ச்சி செய்து அவரைப் படுகொலை செய்தார்.

இப்போது அரியணைக்கு வந்திருக்கும் மிசுசூலு கா ஸ்வெலிதினியும் எளிதாக முடியைக் கைப்பற்றிவிடவில்லை. இதற்கு முன் ஆட்சியில் இருந்த அவரது தந்தை குட்வில் ஸ்வெலிதினியின் இடத்தைப் பிடிப்பதற்காக மன்னர் குடும்பத்தைச் சேர்ந்த பலர் போட்டியிட்டார்கள்.

மன்னர் குடும்பத்தில் பல பிரிவுகள் இருந்தன. ஏனென்றால் மறைந்த மன்னருக்கு ஆறு மனைவிகள். அவர் அரை நூற்றாண்டுக்கும் மேலாக அரியணையில் இருக்கும்வரை அவை வெளிப்படையாக மோதிக் கொள்ளவில்லை.

ஆறு மனைவிகள் அல்லவா? அதனால் மறைந்த மன்னரே யாரை வாரிசாக அறிவிப்பது என்பதில் குழம்பித்தான் போயிருப்பார்.

**இந்த மன்னர் பதவிக்க யாரெல்லாம் சண்டையிட்டார்கள்?**

இப்படியொரு சூழலில் மூன்றாவது மனைவியான ராணி மாண்ட்ஃபோம்பிக்கு அடுத்த வாரிசைத் தேர்வு செய்வதற்கான பொறுப்பைக் கொடுக்கும் வகையில் ஓர் உயில் மன்னர் பெயரில் எழுதப்பட்டிருந்தது.



ராணி மன்ட்ஃபோம்பி மறைந்த மன்னரின் மனைவிகளில் மிக உயர்ந்த அந்தஸ்தைக் கொண்டிருந்தார். ஏனெனில் அவர் அரச குடும்பத்திலிருந்து வந்தவர். ஆனால் ஜூலு இல்லாத வேறு ஒரு பழங்குடி இனம்.

ஜூலு இனத்தில் அவர் திருமணம் செய்து கொள்ளும்போதே, அவருடைய முதல் மகனுக்கு வாரிசுரிமையில் முதல் இடம் வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது.

அதனால் மன்னர் குட்வில் ஸ்வெலிதினி மறைந்ததும் மூன்றாவது மனைவியின் மகனான மிசுசூலு ஸ்வெலிதினியே மன்னராகப் போகிறார் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. உயிலில் குறிப்பிடப்பட்டிருந்தபடி ராணியும், மிசுசூலியின் தாயுமான மன்ட்ஃபோம்பியும் அதையே தனது விருப்பமாகத் தெரிவித்திருந்தார்.

ஆனால் மறைந்த மன்னரின் மகன்களில் மேலும் இருவர் அரியணைக்கு உரிமை கோரினர். அதனால் அரச குடும்பம் மூன்றாகப் பிளவுபட்டது. மிசுசூலு கா ஸ்வெலிதினி, சிமாகடே கா ஸ்வெலிதினி, புஸாபஸி கா ஸ்வெலிதினி ஆகிய மூன்று இளவரசர்களும் மன்னராவதற்குப் போட்டியிட்டனர்.

இந்தச் சமயத்தில் தென்னாப்பிரிக்க அரசு இந்த விவகாரத்தில் தலையிட்டது. மிசுசூலு கா ஸ்வெலிதினியை புதிய ஜூலு மன்னராக அங்கீகரிப்பதாக அந் நாட்டு அதிபர் அறிவித்தார். அதை மிசிசூலுவின் சகோதரர் எம்போனிசி எதிர்த்தார். நீதிமன்றத்தில் வழக்கும் தொடுத்தார். ஆனால் நீதிமன்றம் அதை ஏற்கவில்லை. முடிசூட்டுவிழா நடத்துவதற்கு அனுமதி வழங்கிவிட்டது.

இதன்படி மிசுசூலுவின் பாரம்பரிய முடிசூட்டு விழாவுக்கு ஒரு வாரத்துக்கு முன்பாக அவரது ஒன்றுவிட்ட சகோதரரும் மன்னரின் மூத்த மகனுமான சிமகடேவை புதிய மன்னர் என்று அரச குடும்பத் தைச் சேர்ந்த சிலர் அறிவித்தார்கள். அதற்கு கணிசமான அரச குடும்ப ஆதரவும் இருந்தது.

மன்னரின் முதல் மகன் என்பதால் அவர்தான் இயற்கையான தேர்வு என்று அவரை ஆதரித்தவர்கள் கூறினார்கள்.

அதே நேரத்தில் கடந்த வியாழன்று மன்னரின் மூன்று மகன்கள் சேர்ந்து செய்தியாளர்களைச் சந்தித்தார்கள். அதில் இளவரசர் புஸாபஸிதான் மன்னராக வேண்டும் எனவும், அவரே மன்னருடன் மற்ற அனைவரையும்விட நெருக்கமான உறவு கொண்டிருந்தார் என்றும் அறிவித்தார்கள்.

இந்தச் சிக்கல் முடிசூட்டுவிழா நடந்த சனிக்கிழமையன்றும் தொடர்ந்தது. மிசுசூலுவின் ஒன்று விட்ட சகோதரிகள் சிலர் விழாவை நிறுத்தக் கோரி பீட்டர்மரி டஸ்பர்க்கில் உள்ள நீதிமன்றத்தில் அவசர மனு ஒன்றை தாக்கல் செய்தார்கள். மறைந்த தந்தையின் உயில் போலியானதாக இருக்கலாம் என்று அவர்கள் தங்கள் மனுவில் கூறியிருந்தனர். ஆனால் அதையும் நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது.

மிசுசூலு அரச குடும்பத்தில் வலுவான ஆதரவைப் பெற்றுள்ளார். மரபுப்படி அவரே வாரிசு உரிமையைப் பெற்றிருக்கிறார் என்று அவர்கள் வாதிடுகிறார்கள்.

பழங்குடி இனங்களுக்கு இடையேயான பகைமையும் இந்த பதவிச் சண்டைக்கான காரணமாக இருக்கலாம் என்று சிலர் நம்புகிறார்கள். ஏனென்றால், தற்போது மன்னராகப் பதவியேற்றிருக்கும் மிசுசூலு நூறு சதவிகிதம் ஜூலு இனத்தைச் சேர்ந்தவர் இல்லை. அவரது தாய் எஸ்வாதினி பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர். அதனால்தான் அவரை அரச குடும்பத்தைச் சேர்ந்த பலர் மன்னரின் முழுமையான மனைவியாக ஏற்கவில்லை.





தென்னாப்பிரிக்காவில் பொது விடுமுறை நாளான செப்டம்பர் 24-ஆம் திகதி அதிகாரப்பூர்வமாக பொதுமக்கள் மத்தியில் நடக்க இருக்கும் முடிசூட்டு விழாவுக்கு முன்னதாக பகைமை அகற்றப்படும் எனப் பலர் நம்புகிறார்கள்.

தென்னாப்பிரிக்காவை பொறுத்த வரை கறுப்பினத்தவர் பெரும்பான்மையினர் என்றாலும் அவர்கள் அனைவரும் ஒரே பண்பாட்டையோ, மொழியையோ கொண்ட வர்கள் அல்லர். பல்வேறு இனக் குழுக் கள் அவர்களிடையே இருக்கின்றன. ஜூலு, ஷோசா, பசோதோ, டிஸ்வானா உள்ளிட்டவை அதில் அடங்கும்.

பிபிசி

# புலம்பெயர் தமிழர்களுக்கு அழைப்பு:

## மாலுமி இல்லாத கப்பலில் தமிழ் மக்கள் போருக்குப் பின் பயணித்துக் கொண்டிருக்கின்றனர்!

**வி.தேவராஜ்**

புலம்பெயர் தமிழர்கள் மீதான தடை நீக்கம் குறித்த விடயம் பேசுபொருளாக உள்ளது. இந்தத் தடை நீக்கத்தின் மூலம் தடை நீக்கப்பட்ட புலம் பெயர் அமைப்புகள் சாதிக்க கூடியது என்ன? இதன் மூலம் தமிழ் மக்கள் அடைந்து கொள்ளக்கூடிய அனுகூலங்கள் என்ன?

புலம்பெயர் தமிழர்கள் மீதான தடையை நீக்கியதன் மூலம் இலங்கை அரசாங்கம் குறிப்பாக ரணில் - ராஜபக்ஷர்கள் அரசாங்கம் சாதித்துக் கொள்ள முயல்வது என்ன? தமிழ் மக்களுக்கும் சர்வதேசத்திற்கும் ரணில் - ராஜபக்ஷர்கள் அரசாங்கம் கூற வருகின்ற செய்தி என்ன?

இலங்கையில் மாறி மாறி ஆட்சிபீடம் ஏறுகின்ற அரசாங்கங்கள் காலத்துக்குக் காலம் தமிழர் விவகாரத்துடன் தொடர்புடைய விடயங்களில் தமது நலன்களுக்காக இவ்வாறான முடிவுகளை அறிவிப்பதும் அந்த முடிவுகளை நடைமுறைப்படுத்தாதுவிடுவதும் மீண்டும் புதிது புதிதாக முடிவுகளை அறிவிப்பதும் வழமையான ஒன்று. இலங்கை அரசாங்களின் இவ்வாறான நகர்வுகளின் ஒரு நீட்சியே புலம்பெயர் தமிழர்கள் மீதான தற்போதைய தடை நீக்கம் ஆகும். ரணில் - ராஜபக்ஷர்கள் அரசாங்கம் தமது நலன்களுக்காக நாளை இதனை மாற்றிக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அன்று பிரதமராக அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நல்லாட்சி அரசாங்கத்தை அமைத்தபோது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பு தோற்றுவிக்கப்பட்டது. நல்லாட்சி அரசாங்கத்தைக் கொண்டுவருவதில் தமிழ் மக்களின் பங்களிப்பு குறிப்பாக தமிழ் பேசும் மக்களின் பங்களிப்பு மிக அளப்பரியதாக இருந்தது.

நல்லாட்சி அரசாங்கத்தை தாமே கொண்டுவந்ததாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு நெஞ்சை நிமிர்த்தி பிரகடனப்படுத்திக் கொண்டிருந்த காலம். இந்த ஆரவாரங்களுக்கு மத்தியில் ஐ.நா. மனித உரிமை சபையில் 'தகர்ந்து போகும் வாக்குறுதிகளுடன் வரவில்லை' என்று அப்போதைய வெளிநாட்டமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டார். அந்த வாக்குறுதிகளுக்கு என்ன நடந்தது என்பது பற்றி தமிழ் மக்களுக்கு குறிப்பாக புலம்பெயர் தமிழர்களுக்கு நன்றாகவே தெரியும். அந்தவகையில் புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் மீதான தடை நீக்கம் குறித்து கொண்டாடுவதற்கு என்ன உள்ளது.

2009 மே மாதம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முடிவடைந்த பின்னர் இந்த அமைப்புகளில் பல மாறி மாறி பயங்கரவாத அமைப்புகளாக அறிவிக்கப்பட்டு மீண்டும் பலமுறை பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன. யுத்தம் முடிவடைந்து ஐந்து வருடங்களின் பின்னர் 2014ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் 424 நபர்களையும் 16 அமைப்புகளையும் தடை செய்தது.

2015 நவம்பர் 20 அன்று நல்லாட்சி அரசாங்கம் எட்டு அமைப்புகள் மற்றும் அவற்றில் அங்கம் வகித்த 267 தனிநபர்கள் மீதான தடையை நீக்கியது. பின்னர் மீண்டும் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி ஏழு அமைப்புகளையும் 389 நபர்களையும் தடைப் பட்டியலில் சேர்த்தது. தற்போது 6 அமைப்புகளும் 316 நபர்களும் மீண்டும் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் பேசும் மக்களின் நியாயமான அபிலாஷைகளை அடைவதற்கான பயணத்தில் 2014 இல் பட்டியலிடப்பட்டோம், 2015 இலும்பட்டியலிடப்பட்டோம், 2021 இல் மீண்டும் பட்டியலிடப்பட்டோம். 2022 இல் மீண்டும் பட்டியலிடப்பட்டோம்' என்று சுரேந்திரன் 'த ஜலன்ட்' நாளிதழுக்குத் தெரிவித்துள்ளார்.

மாறிமாறி ஆட்சிபீடம் ஏறும் கட்சிகள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று கூறியே புலம்பெயர் அமைப்புகள் மற்றும் தனி நபர்கள் மீதான தடைகளை விதிப்பதும் பின்னர் சில அமைப்புகள் மீதான தடைகளை நீக்குவதும் மீண்டும் தடைவிதிப்பதுமாக நாடகமாடிக் கொண்டிருக்கின்றனர்.

இதுபற்றி டெய்லிமிரர் ஆகஸ்ட் 16 ஆம் திகதி (16.08.2022) தனது ஆசிரியர் தலையங்கத்தில் பின்வரும் கேள்விகளை முன்வைக்கின்றது.



தேசிய பாதுகாப்பிற்கு விரோதமான அமைப்புக்கள் என தடை செய்யப்பட்ட இரண்டு தடவையும் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ராஜபக்ஷவால் முடிவெடுக்கப்பட்டது.

அதே நேரத்தில் தடையை நீக்கும் முடிவுகளை ரணில் விக்கிரமசிங்க முதல்முறையாக பிரதமராகவும் இப்போது ஜனாதிபதியாகவும் இருக்கும் போது எடுக்கப்பட்டுள்ளது. எனவே உளவுத்துறை மதிப்பீடுகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவுகள் அல்ல அரசியல் முடிவுகள் என்று எவரும் முடிவு செய்வது இயல்பானதே.

கோட்டபாய ராஜபக்ஷ தொடர்ந்து ஜனாதிபதியாக இருந்திருந்தால் அதிகாரிகள் சமீபத்திய முடிவை எடுத்திருப்பார்களா? என்று கேள்வி எழுப்பும் 'டெய்லி மிரர்' ஆசிரியர் தலையங்கம், எவ்வாறாயினும் ஒவ்வொரு முறையும் அரசாங்கத்தின் முடிவுகள் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளின் இத்தகைய மதிப்பீடுகள் மற்றும் பரிந்துரைகளுக்கு காரணமாகும் என்றும், சிறிலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ராஜபக்ஷர்களின் ஆதிக்கம் செலுத்தும் தற்போதைய அரசாங்கத்தின் தலைவர்கள் காது கேளாத மௌனத்தையும் மீறி சமீபத்திய முடிவுக்கு உடன்படுகிறார்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் எட்டு அமைப்புக்கள் மற்றும் 267 நபர்களை பட்டியலிலிருந்து நீக்கியபோது அவர்கள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார்கள் என்பதையும் டெய்லி மிரர் ஆசிரியர் தலையங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

உண்மையில் 'தேசிய பாதுகாப்பு' என்ற போர்வையில் அரசியல் தலைமைகள் மேற்கொள்ளும் தீர்மானங்களே இவை. இந்தத் தீர்மானங்களுக்கும் தேசிய பாதுகாப்புக்கும் சம்பந்தம் இருப்பதாக தெரியவில்லை. கடந்த கால தடைகள் தடை நீக்கம் என்பன மாத்திரமல்ல தற்போதைய தடை நீக்கமும் இதனையே உணர்த்தி நிற்கின்றன.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது 2010ஆம் ஆண்டளவில் புலம் பெயர் அமைப்புக்களில் ஒரு சில அமைப்புக்கள் மற்றும் தனி நபர்கள் அவரை வந்து சந்தித்தனர். தமிழர்களுக்கு உதவ வேண்டும் தமிழர் பகுதிகளில் முதலிட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடுதான் வந்தனர்.

ஆனால் ஒன்றும் நடைபெறவில்லை. "வந்தார்கள் சென்றார்கள்" என்பதாகத்தான் இருந்தது. ஆனால், இவர்களின் வரவை வைத்து மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் பரபரப்புச் செய்திகளாக்கி ஊடகங்களுக்குத் தீனி போட்டது. ஆனால் தமிழர் தாயகத்தில் ஒன்றும் நடைபெறவில்லை.

அண்மையில் நண்பர் ஒருவர் 'வீடியோ கிளிப்' பொன்றை அனுப்பி வைத்திருந்தார். வெளி நாட்டில் இருந்து வடக்கில் முதலிட வந்தவர். அவர் தனது பெயர் வாசுதேவன் என்று குறிப்பிடுகின்றார். 40 வருடங்களுக்கு மேல் வெளிநாட்டில் வசித்து வருவதாகவும் சொந்தக் கம்பெனி வைத்திருந்ததாகவும் ஓய்வு பெற்று தாயகம் திரும்பி தாயகத்தில் முதலிட்டு தொழில் தொடங்க வந்ததாகக் குறிப்பிடுகின்றார்.



நோயாளியான ஒருவர் சிகிச்சையின் பின் மீள் எழ அதாவது பழைய நிலைக்குத் திரும்பும் நிலை உள்ளது. அந்த RECOVER PERIOD போருக்குப் பின் தமிழர் பகுதிகளில் நடைபெறவில்லை. இதனால்தான் வட பகுதியில் பிரச்சினைகள் தோன்றியுள்ளன. இவைகளை கருத்திற் கொண்டு வட மாகாணத்திற்கு நேரடியாக வெளிநாட்டு முதலீடுகளைக் கொண்டுவந்து தொழிற்துறையை தொடங்குவதற்கு 2012ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்தேன் என்று கூறும் திரு வாசுதேவன் இதற்கென பண்ணைக் கடலோரம் ஆய்வுகளை மேற்கொண்டதாகக் குறிப்பிடுகின்றார்.

இந்த திட்டத்தில் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலிட திட்டமிடப்பட்டதாகக் குறிப்பிடுகின்றார். ஆனால், இந்தத் திட்டத்திற்கு எவ்வளவோ முயற்சித்தும் அனுமதி வழங்கப்படவில்லை என்று குறிப்பிடுகின்றார்.

அதேவேளையில் புலம் பெயர்ந்து வாழும் அவருடைய பல நண்பர்கள் பல பில்லியன் அமெரிக்க டொலர்களை வடக்கில் முதலிட விருப் பம் தெரிவித்தனர் என்றும் அவர் குறிப்பிடுகின்றார். இறுதியில் அவர் ஊவாவில் சென்று முதலிட்டதாகவும் அங்கு தொழிற்துறையைத் தொடங்க எந்தவிதத் தடைகளும் இருக்கவில்லை என்றும் திரு வாசுதேவன் குறிப்பிடுகின்றார். நான் தமிழன். தமிழர் பகுதியில் முதலிட தனக்கு அனுமதி இல்லை என்று அவர் குறிப்பிடுகின்றார்.

2016 இல் பூநகரி மண்ணித்தலையில் முதலிடுவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்ட போதும் அதற்கும் அனுமதி கிடைக்கவில்லை. குறிப்பாக வெளிநாட்டு முதலீடுகளுடன் 15 திட்டங்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை என திரு வாசுதேவன் குறிப்பிடுகின்றார்.

கனடா நாட்டைச் சேர்ந்த ஒருவர் வடக்கில் உப்பளம் அமைப்பதற்காக இரண்டரை வருடங்கள் முயற்சித்தும் அனுமதி கிடைக்காமையால் உப்பளம் அமைக்கும் திட்டத்தையே கைவிட்டுச் சென்றுவிட்டார் என்றும் திரு வாசுதேவன் சுட்டிக் காட்டுகின்றார். இந்த நிலைமையில் தமிழர் பகுதிகளுக்கு எவ்வாறு வெளிநாட்டு முதலீடுகள் வரும் தமிழர் பகுதிகள் அபிவிருத்தியாகும் பிரச்சினைகள் தீரும் என கேள்வி எழுப்பினார்.

புலம்பெயர் தமிழர்களே அமைப்புக்களே இதுதான் இலங்கை சிங்கள அரசாங்கங்களின் நிலைப்பாடு.

திரு வாசுதேவனின் உரையைக் கேட்டபோது 1977ஆம் ஆண்டென நினைக்கின்றேன் அப்போதைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமிர்தலிங்கம் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் ஆற்றிய உரை மீண்டும் எனது காதுகளில் ஒலித்தது. 'அகப்பை அவன் கையில்' இன்றும் அதே நிலைதான் மாற்றமின்றி தொடர்கின்றது.

வேண்டுமானால் புலம்பெயர் தமிழர்கள் இலங்கை மக்களுக்கு இந்தியா தமிழ்நாடு மற்றும் நாடுகள் உதவி செய்வதுபோன்று உதவிசெய்யலாம். இதற்கு மாறாக தமிழர் விவகாரத் தீர்வு குறித்து பேசப்போனால் நிறையவே 'தகர்ந்துபோகும் வாக்குறுதிகளை' அள்ளி வழங்க ரணில் - ராஜபக்ஷ அரசாங்கம் தயாராக உள்ளது. இந்த வாக்குறுதிகளை நீங்கள் வாங்க தயாராக இருந்தாலும் தமிழ் மக்கள் மீண்டும் ஏமாறுவதற்கு தயாராக இல்லை.

சர்வதேசத்தின் வாக்குறுதிகளுடன் நீங்கள் களத்தில் இறங்க தயாராக இருந்தாலும் நோர்வே சர்வதேச அணியுடன் தமிழ் மக்களை முள்ளிவாய்க்கால்வரை தள்ளி கொன்றொழித்த வரலாரையும் தமிழ் மக்கள் மறப்பதற்கில்லை.

புலம்பெயர் தமிழர்களான உங்களிடம் இலங்கை அரசாங்கத்தையும் சாவதேசத்தையும் கையாளக் கூடிய திட்டங்கள் வியூகங்கள் இருப்பின் களத்தில் இறங்கலாம். ஏனெனில் தமிழ் மக்களுக்கு இலங்கையில் தலைமை இல்லை. மாலுமி இல்லாத கப்பலில் தமிழ் மக்கள் போருக்குப் பின் பயணித்துக் கொண்டிருக்கின்றனர்.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

**06) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i) நான் ........................................ (ஆவணி, ஆவனி) மாதம் பிறந்தேன்.

ii) தேசியக்கொடியில் .................................... (வால், வாழ், வாள்) ஏந்திய சிங்கம் ஒன்று உண்டு.

ii) நாங்கள் .................................................... (சுற்றுலா, சுற்றுளா, சுற்றுழா) விற்காகக் கண்டிக்குச் சென்றோம்.

(3 புள்ளிகள்)

**07) பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

i) ஆற்றிலே போட்டாலும் .........................................................................

ii) ...................................................... குறுகுறுக்கும். (2 புள்ளிகள்)

**08) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

i) பலா கன்று போல பயிர் : ............................................................

ii) தென்னை ஓலை போல மூங்கில் : .................................................... (2 புள்ளிகள்)

**09) பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.**

i) தம்பி தண்ணீரை ................................ (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் ................................. (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது.

(2 புள்ளிகள்)

**10) தனிச்சொல்லை எழுதுக.**


i) வீண் செலவு செய்பவன் : .................................................................


ii) விமானத்தைச் செலுத்துபவன் : ..................................................... (2 புள்ளிகள்)

**11) கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) Bread: ............................ ii) Cloud: ............................ (2 புள்ளிகள்)

**12) தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.**

i)  ..................................

ii)  ..................................

(2 புள்ளிகள்)

**13) பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.**

i) do / like? /What / you : .............................................................................

ii) old / How / you? /are : ........................................................................................ (2 புள்ளிகள்)

**14) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) ரோஹல : ............................................................

ii) தொளஹ : ......................................................... (02 புள்ளிகள்)

**15) பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

i) சோறு சாப்பிடுங்கள் : ...........................................................................................

ii) அங்கே பாருங்கள் : ........................................................................................... (02 புள்ளிகள்)

❖ **விடை எழுதுக.**

**16)**

| | |
|---|---|
| 7 | 8 |
| 3 | 0 |

இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

..................................................................

**17)** ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

.....................................................................................

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 06. | 1) ஆவணி | 2) வாள் | 3) சுற்றுலா |
| 07. | 1) அளவறிந்து போடு | 2) குற்றமுள்ள நெஞ்சு | |
| 08. | 1) நாற்று | 2) தாள் | |
| 09. | 1) மடமட | 2) தக தக | |
| 10. | 1) ஊதாரி | 2) விமானி / வலவன் | |
| 11. | 1) பாண் | 2) முகில் | |
| 12. | 1) Star | 2) Table | |
| 13. | 1) What do you like? | 2) How old are you? | |
| 14. | 1) வைத்தியசாலை | 2) பன்னிரண்டு | |
| 15. | 1) பத் கன்ன | 2) எத்தன பலன்ன / எஹே பலன்ன /அத்தன பலன்ன | |
| 16. | 8 730 | 17. 7 309 | |

கல்வி tv CHANNEL-1

**23.07.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**23.07.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு



# மத்தியிலும் சிறுபான்மையினருக்கு அதிகாரப் பகிர்வு வழங்கவேண்டும்

## ஹரீஸ் எம்.பி கோரிக்கை



அம்பாறை, ஓக. 23

**மாகாணங்களில் மட்டுமின்றி மத்தியிலும் சிறுபான்மையினருக்கு அதிகார பகிர்வும், அரசியல் அந்தஸ்தும் பெற தமிழ், முஸ்லிம் கட்சிகள் முன்வரவேண்டும் என முன்னாள் இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த காலகட்டத்தில் தமிழ் முஸ்லிம் சமூகம் இந்த நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப உதவ வேண்டிய தருணமிது. அதற்காக மத்தியிலும் அதிகார பரவலாக்க முறையை உருவாக்க வேண்டும். அதுதான் தமிழ்- முஸ்லிம் ஆகிய இரு சமூகத்திலிருந்தும் இரு உப ஜனாதிபதி பதவிகள். இந்த நிலைப்பாட்டை தான் முன்னாள் அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தலைவருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எச். எம். அஸ்ரப் கடந்த 2000 ஆம் ஆண்டு அரசியலமைப்பு நகலாக பாராளுமன்றில் சமர்ப்பித்திருந்தார். அதில் மத்தியில் சிறுபான்மையினருக்கு அதிகார பகிர்வும், அரசியல் அந்தஸ்தும் உருவாக்க வேண்டும் என்பதற்காக இரண்டு உப ஜனாதிபதி முறை தேவை என்று வலியுறுத்தியிருந்தார். இந்த சூழலில் தமிழ் - முஸ்லிம் கட்சிகள் ஒன்றிணைந்து மத்தியில் சிறுபான்மையினருக்கு அதிகார பகிர்வு வழங்குவது பற்றி பேச வேண்டும். அதற்காக தமிழ் முஸ்லிம் சர்வகட்சி மாநாடு கூட்டப்பட வேண்டும்.

பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் பலமிக்க முக்கிய சக்திகளாக கொள்ளப்படும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும், எண்ணெய் வளங்கொண்ட அரபு நாடுகளினதும் உதவியினை தமிழ்,முஸ்லிம் கட்சிகள் பெற்று இந்த ஆபத்தான காலகட்டத்தில் இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப பங்களிப்பினை செய்கின்றபோது இலங்கையின் பெரும்பான்மை மக்கள் மத்தியில் சிறுபான்மைச் சமூகம் சம்பந்தமாக நல்லபிப்பிராயம் ஏற்படும்.

வரலாற்றில் எப்போதும் இல்லாதவகையில் ஒரு நல்ல நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த காலப்பகுதில் இனப்பிரச்னைக்கான தீர்வு, அதிகார பகிர்வு, வடக்கு, கிழக்கில் நீண்டகாலம் நிலைகொண்டுள்ள காணிப்பிரச்னைகள், இராணுவம் கையகப்படுத்தி வைத்துள்ள காணிகள், வன இலாகா அம்பாறையில் கைப்பற்றியுள்ள முஸ்லிங்களின் காணிகள் தொடர்பில் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளை நடத்தி ஜனாதிபதி அறிவிப்பு விடுத் துள்ள சர்வ கட்சி ஆலோசனை கொண்ட அரசாங்கத்தை வலுப் படுத்தும் தேவை சிறுபான்மை கட்சிகளுக்கு இருக்கிறது. இதனடிப்படையில் தமிழ்- முஸ்லிம் கட்சிகளின் சர்வகட்சி மாநாடு அவசரமாக கூட்டப் பட்டு சிறுபான்மையினரின் பிரச்னைகள் தொடர்பில் கொள்கைப்பிரகடனம் அமைக்கப்பட வேண்டும் என்பது எனது நிலைபாடாகும்- என்றார். (அ)

# ஒன்றரை கோடி ரூபா பெறுமதி கொண்ட தொழிற்சாலை உபகரணங்கள் திருட்டு!

## ஐந்து பேர் பொலிஸாரினால் கைது

அம்பாறை, ஓக. 23

சுமார் ஒரு கோடியே 50 இலட்சம் பெறுமதியான மோட்டார் மற்றும் மின் உபகரணங்களை திருடிச் சென்ற 5 சந்தேக நபர்கள் காரைதீவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் எல்லைக்குட்பட்ட மாவடிப் பள்ளி பகுதியில் உள்ள உருக்கு இரும்பு தொழிற்சாலையில் இந்த திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை குறித்த தொழிற்சாலையின் பாதுகாப்புக்காக போடப்பட்ட பூட்டுக்கள் உடைக்கப்பட்டு நுணுக்கமாக பொருட்கள் திருடப்பட்டிருந்தன.

இதனை தொடர்ந்து உரிமையாளர் தொழிற்சாலையில் பாரிய திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்து முறைப்பாடு ஒன்றை காரைதீவு பொலிஸ் நிலையத்தில் வழங்கினார்.

குறித்த திருட்டுச் சம்பவத்தில் பிரதான சந்தேக நபர் இனங்காணப்பட்ட நிலையில் அவரை தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்ட பொலிஸ் குழு அவரை அணுகி புலனாய்வு நடவடிக்கையை மேற்கொண்டது.

இந்நிலையில் பல வருடங்களாக குறித்த தொழிற்சாலையில் பணியாற்றி வந்த சந்தேக நபர் நேற்று திங்கட்கிழமை அதிகாலை கைதானதுடன் திருட்டு சம்பவத்துக்கு உடந்தையாக செயற்பட்ட ஏனைய நால்வரும் கைதாகினர்.

திருடிச் செல்லப்பட்ட சுமார் 1 கோடியே 50 இலட்சம் பெறுமதியான மோட்டார் உட்பட உபகரணங்கள் பொலிஸாரினால் மீட்கப்பட்டன.

கைதான சந்தேக நபர்கள் போதைப் பொருட்களுக்கு அடிமையானதுடன் மீட்கப்பட்ட சான்று பொருட்கள் யாவும் நீதிமன்ற நடவடிக்கைக்காக எடுத்து பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து செல்லப்பட்டன. (அ)

# சுகாதார நடைமுறையை பின்பற்றாத உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை!

மட்டக்களப்பு, ஓக. 23

அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்துக்குட்பட்ட பிரதேசங்களில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக, அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி ஏ.எம். இஸ்மாயில் தெரிவித்தார்.

ஒலுவில், பாலமுனை மற்றும் அட்டாளைச்சேனை ஆகிய பிரதேசங்களிலுள்ள உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களில் பாவனைக்கு உதவாத உணவுப் பண்டங்கள் விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்களால் முறையிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி மருத்துவர் ஐ.எல். எம்.றிபாஸின் ஆலோசனைக்கமைய, பொதுச் சுகாதார பரிசோதகர்களால் உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்கள், பேக்கரிகள் என்பன திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

உணவு சட்ட விதிமுறைகள், நுகர்வோர் விவகார சட்டங்கள் மற்றும் அதன் விதிமுறைகளுக்கு அமைய வேண்டுமெனவும், உணவு தயாரிப்போர், உணவு விநியோகிக்கும் இடம், பயன்படுத்தும் உபகரணம் போன்றவற்றின் தூய்மையாக வைத்திருக்கவேண்டுமெனவும், உணவகங்களில் பணியாற்றுபவர்கள் முகக்கவசம், கையுறை போன்றவற்றை பாவிக்க வேண்டுமெனவும் அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி ஏ.எம்.இஸ்மாயில் கேட்டுள்ளார்.

உணவு பாதுகாப்பு சட்ட திட்டங்களை மீறுபவர்களுக்கெதிராக நீதிமன்றினூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதோடு, பாவனைக்குதவாத உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் நிலையங்கள் கண்டுபிக்கப்பட்டால், அதன் உரிமையாளருக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்நிலையங்கள் மூடப்படுமெனவும் அவர் மேலும் கூறினார். (அ)

# உள்ளூராட்சி செயலர்களின் இடமாற்றத்தை உடனே மறுபரிசீலனை செய்யக் கோரிக்கை

அம்பாறை, ஓக. 23

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்களின் இடமாற்றங்களை இடைநிறுத்தி, பதில் கடமை விடயம் தொடர்பிலும் மறுபரிசீலனை செய்யுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழிற் சங்கத்தின் தலைவர் ஏ.ஜீ. முபாறக் தெரிவித்தார். இது தொடர்பாக ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் மற்றும் நிர்வாக சேவை உத்தியோகத்தர் பதவிகளில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிசிறப்புத் தரத்தை சேர்ந்தவர்கள் கடமையாற்றுவதுடன், அத்தரத்தை சேர்ந்தவர்கள் இல்லாத சபைகளில் அவர்களின் பதில் கடமைகளை முகாமைத்துவ சேவை தரம் 1 இனைச் சேர்ந்தவர்கள் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் தற்போது மேற்படி உத்தியோகத்தர்களில் சுமார் 20 பேர் திடீரென இடமாற்றப்பட்டுள்ளனர். வருடாந்த இடமாற்றத்துக்கு விணப்பங்கள் கோரப்பட்டுள்ள நிலையில், இவ்வாறான இடமாற்றங்கள் செய்ய முடியாது .

அத்துடன், பதில் கடமையாற்றியார்களில் சிலர் பதில் கடமையில் இருந்து தீக்கப்பட்டு, அவ்விடங்களுக்கு வேறு புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக வும் தெரவிக்கப் பட்டுள்ளது.

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் அதிசிறப்பு தரத்தினருக்கு நேர்முகப்பரீட்சை தற்பொது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படவுள்ள இத்தருணத்தில், இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டிருப்பது, சில வெற்றிடங்களை இல்லாமலாக்கி குறித்த சிலருக்கு சில இடங்களை வழங்குவதற்கான திட்டமிட்ட செயற்பாடாக கருதப் படுவதாக சுட்டிக்காட்டப்பட்டது. (அ)

# ஆப்கானில் திடீர் வெள்ளம் 20 பேர் வரை உயிரிழந்தனர்

## 3,000 வீடுகளும் அழிவடைவு



காபூல், ஓக. 23

கிழக்கு ஆப்கானிஸ்தானின் லோகார் மாகாணத்தில் பெய்து வரும் கன மழையைத் தொடர்ந்து கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட திடீர் வெள்ளப் பெருக்கில் சிக்கி 20 பேர் உயிரிழந்தனர். மேலும் 30 பேர் காயமடைந்தனர்.

மேலும் வெள்ளப் பெருக்கால் 3,000 க்கும் மேற்பட்ட வீடுகள் அழித்துள்ளதாக அதிகாரிகள் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தனர்.

ஆப்கானிஸ்தானில் கடந்த வாரம் பெய்த கனமழை வெள்ளப்பெருக்கில் சிக்கி 40 -க்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்த நிலையில் மேலும் பெரும் அழிவுகள் பதிவாகியுள்ளன.

வெள்ளம் நூற்றுக்கணக்கான கால்வாய்களையும் சுமார் 5,000 ஏக்கர் விவசாய நிலங்களையும் அழித்தது. பெருமளவு பழத்தோட்டங்கள் அழிந்தன. சுமார் 2,000 கால்நடைகளும் கொல்லப்பட்டன என லோகார் மாகாண ஆளுநர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட வெள்ளப் பெருக்கை அடுத்து பாதுகாப்புப் படையினரும் தொண்டு நிறுவனங்களும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்க முன்வருமாறு சர்வதேச நாடுகளிடம் அரசாங்க செய்தித் தொடர்பாளர் பிலால் கரிமி கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கிடையே எதிர்வரும் நாட்களில் 21 மாகாணங்களில் கனமழை மற்றும் வெள்ளம் எதிர்பார்க்கப்படுவதாக நாட்டின் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் ஒவ்வொரு ஆண்டும் ஏராளமான வர்கள் வெள்ளம் மற்றும் பெரு மழையால் இறக்கின்றனர். குறிப்பாக ஏழை கிராமப்புறங்களில் மோசமாக கட்டப்பட்ட வீடுகள் பெரும்பாலும் இடிந்து விழும் ஆபத்தை எதிர்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.(அ)

# ஜபோரிஜியா அணுமின் நிலைய பாதுகாப்பை உறுதி செய்யுங்கள்!

## மேற்குலக தலைவர்கள் வலியுறுத்தல்

லண்டன், ஒக. 23

**ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள உக்ரைனின் ஜபோரிஜியா அணுமின் நிலையத்தின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியதன் அவசியத்தை பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் வலியுறுத்தியுள்ளன.**



நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இணைய வழியில் பேசிய இங்கிலாந்தின் போரிஸ் ஜான்சன், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பிரெஞ்சு ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் மற்றும் ஜேர்மன் ஆட்சித் தலைவர் ஓலாப் ஷோல்ஸ் ஆகியோர் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியதுடன், ரஷ்யாவின் படையெடுப்பிற்கு எதிராக உக்ரைனுக்கு தங்கள் ஆதரவை மீண்டும் வலியுறுத்தினர்.

ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள அணுமின் நிலைய சூழலில் மீது ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. எனினும் இந்தத் தாக்குதலுக்கு உக்ரைன் - ரஷ்யா இரு நாடுகளும் ஒருவர் மீது ஒருவர் பரஸ்பரம் குற்றம்சாட்டி வருகின்றன.

இவ்வாறான தாக்குதல்களால் பேரழிவு ஏற்படுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

இதேவேளை, உக்ரைன் 31 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் 24 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ள நிலையில் அதனைக் குழப்பும் நோக்கில் ரஷ்யா தாக்குதல்களை நடத்தக்கூடும் என்பதால் இது குறித்து விழிப்பாக இருக்குமாறு உக்ரேனியர்களை அந்நாட்டு ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி எச்சரித்துள்ளார்.

அண்மைய நாட்களில் ரஷ்யா ஆக்கிரமிப்பு கிரிமியாவில் இடம்பெற்ற குண்டுவெடிப்புகள் மற்றும் ஜபோரிஸ்ஜியா அணுமின் நிலைய சூழலில் இடம்பெற்ற தாக்குதல்களில் 12 பொது மக்கள் காயமடைந்தனர்.

இந்நிலையில் சுதந்திர தின நிகழ்வுகளை குழப்பும் வகையிலான ரஷ்யாவின் செயற்பாடுகளை உக்ரேனியர்கள் அனுமதிக்கக்கூடாது. விரக்தி மற்றும் பயத்தை ஏற்படுத்தும் ரஷ்யாவின் அசிங்கமான சதி முயற்சிகளுக்கு இடமளிக்கக் கூடாது என ஜெலென்ஸ்கி வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறான நிலையில் ஜபோரிஜியா அணுமின் நிலையத்தின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் அதன் சூழலை இராணுவ சூனிய வலயமாக அறிவிக்க வேண்டியதன் அவசியத்தை பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் தலைவர் கள் வலியுறுத்தினர்.

அணுமின் நிலைய பகுதிகளில் இடம்பெறும் மோதல்களால் 1986 இல் செர்னோபிலில் ஏற்பட்ட பேரழிவை விட மோசமான பேரழிவு ஏற்படலாம் எனவும் அவர்கள் எச்சரித்தனர்.

இதேவேளை, ஐ.நா. ஆய்வாளர்கள் ஜபோரிஜியா அணுமின் நிலையத்தை ஆய்வு செய்ய ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் வெள்ளிக்கிழமை ஒப்புதல் அளித்துள்ளமையை நான்கு தலைவர்களும் வரவேற்றனர்.

இதேவேளை, நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமையும் ஜபோரிஜியா மின் நிலையத்திற்கு அருகிலுள்ள நிகோபோல் நகரில் ஏவுகணை தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக உக்ரைன் குற்றஞ்சாட்டியுள்ளது. (அ)

# சிங்கப்பூரில் அமையும் உலகின் பாரிய தானியங்கி துறைமுகம்!

சிங்கப்பூர் சிற்றி, ஒக. 23



சிங்கப்பூர் அமைத்து வரும் துவாஸ் துறைமுகம் (Tuas Port) இன்னும் 20 ஆண்டுகளில் உலகின் மிகப் பெரிய முழுமையான தானியங்கித் துறைமுகமாக இருக்கும் என அந்நாட்டு பிரதமர் லீ சியென் லூங் தெரிவித்தார்.

சிங்கப்பூர் தேசிய தினக் கூட்ட உரையில் பேசும் போது அவர் இதனைக் குறிப்பிட்டார். இந்தத் துறைமுகம் சிங்கப்பூரை உலகளவில் கடல் துறையில் முன்னணி இடம் வகிக்கச் செய்யும் எனவும் அவர் கூறினார்.

துவாஸ் துறைமுகம் 4 கட் டங்களாக மேம்படுத்தப் படும். 2040களில் அதன் கட்டுமானம் முடிவடையும். 1,337 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் அமைக்கப்படும் துவாஸ் முனையம் 65 மில்லியன் 20 அடிக் கொள்கலன்களை கையாளும்.

துவாஸ் முனையத்துக்கான நில ஒதுக்கீட்டுப் பணிகள் 2015ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தொடங்கின. 2021 நவம்பரில் முடிவடைந்தன. 450 நிறுவனங்களின் ஆதரவுடன் 34 மில்லியன் மணி நேரம் நில ஒதுக்கீட்டுக்குச் செலவிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.(அ)

விவசாயம், நீர் மின் உற்பத்தியை பாதுகாக்க

# செயற்கையான மழையை உருவாக்கச் சீனா முயற்சி!

நீர் மின் உற்பத்திக்கு உதவும் வகையிலும் மழையின்மையால் அழிவின் விழிம்பில் உள்ள விவசாய செய்கைகளைப் பாதுகாக்கும் நோக்குடனும் ரசாயனங்களை முகிலுக்குள் செலுத்தி செயற்கை மழையை உருவாக்கும் முயற்சியில் சீனா ஈடுபட்டுள்ளது.

சீனா - தென்மேற்கில் உள்ள தொழிற்சாலைகளின் நீர் மின் உற்பத்திக்கு தண்ணீர் பற்றாக்குறையால் இன்னும் ஒரு வாரத்திற்கு மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன், இந்தப் பகுதியில் அறுவடைக்கு சிறிது காலமே உள்ள பெருமளவு பயிர்கள் அழிவின் விளிம்பில் உள்ளன.

இவ்வாறான நிலையிலேயே செயற்கை மழையை உருவாக்கி நீர் மின் உற்பத்திக்கு உதவவும், விவசாயத்தைப் பாதுகாக்கவும் சீனா நடவடிக்கை எடுத்துள்ளது.

சீனாவில் 61 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தக் கோடைகாலத்தில் வெப்பநிலை அதிகமாக பதிவானது. இதனால் நீர்த் தேக்கங்களில் நீர் மட்டத்தின் அளவு பாதியாக குறைந்துவிட்டது. சிச்சுவான் மாகாணத்தில் கடந்த வாரம் வெப்பநிலை 45 டிகிரி செல்சியஸை கடந்ததால், வீடுகளில் வாயுச் சீராக்கி இயந்திரங்களின் தேவை அதிகரித்தது. இதன் காரணமாக கடந்த வாரம் மின்சாரத்தை சேமிப்பதற்காக தொழிற்சாலைகள் மூடப்பட்டன.

இதேவேளை, சீனாவின் தென் பகுதியில் அடுத்த 10 நாள்களில் நெற்பயிரில் சேதத்தைக் குறைக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படும் என விவசாய துறை அமைச்சர் தாங் ரெஞ்சியன் தெரிவித்ததாக குளோபல் ரைம்ஸ் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

சீனாவின் வருடாந்த மொத்த தேசிய விவசாய உற்பத்தியில் இலையுதிர் கால அறுவடை 75 சதவீதம் பங்கு வகிப்பதால், எவ்வித சேதமும் ஏற்படாதவாறு அறுவடையை உறுதிப்படுத்த அதிகாரிகள் அவசர நடவடிக்கைகளை கையாண்டு வருகின்றனர் எனவும் குளோபல் ரைம்ஸ் கூறியுள்ளது. (அ)

# தென்கொரியா-அமெரிக்கா இடையே மாபெரும் கூட்டு இராணுவப் பயிற்சி!

நியூயோர்க், ஒக.23

தென்கொரியா - அமெரிக்கா இடையிலான மிகப் பெரிய கூட்டு இராணுவப் பயிற்சி நேற்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வட கொரியா இவ்வாண்டு தொடர்ச்சியாக ஏவுகணை சோதனைகளை நடத்தி வருவதுடன், அணு ஆயுத சோதனைக்கும் தயாராகி வருவதாக தகவல்கள் வெளியாகும் நிலையில் தென்கொரியா - அமெரிக்கா இணைந்து மிகப் பெரும் கூட்டு இராணுவ பயிற்சிகளை ஆரம்பித்துள்ளன.

தென்கொரியா - அமெரிக்கா இடையே ஆண்டு தோறும் இடம்பெறும் கோடைகால பயிற்சிகளுக்கு இந்த ஆண்டு உள்ச்சி ப்ரிடம் சீல்ட் (Ulchi Freedom Shield) என மறு பெயரிடப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சிகளை செப்ரெம்பர் 1 ஆம் திகதி நிறைவுறுத்த இரு நாடுகளும் திட்டமிடப்பட்டுள்ளன.

மே மாதம் பதவியேற்ற தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக்-யோல் அமெரிக்காவுடனான ஒருங்கிணைந்த பயிற்சிகளை தீவிரமாக்கவும் வட கொரியாவின் அச்சுறுத்தல்களுக்கு எதிராக தற்காப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவும் உள்ளதாக உறுதியளித்ததை தொடர்ந்து கூட்டுப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாறிவரும் போரின் வடிவங்களை எதிர்கொள்வதற்கான நாட்டின் தயார் நிலையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்த இராணுவ பயிற்சிகள் முன்னெடுக்கப்படும் என தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக்-யோல் கூறியுள்ளார்.

இதேவேளை, தென் கொரியாவும் அமெரிக்காவும் பயிற்சிக்கான பூர்வாங்க ஏற்பாடுகளை கடந்த வாரம் ஆரம்பித்ததை அடுத்து வட கொரியா இரண்டு கப்பல் ஏவுகணைகளை ஏவி சோதனை நடத்தியது.

இதற்கிடையே வடகொரியா இந்த ஆண்டு முன்னெப்போதும் இல்லாத வகையில் ஏவுகணை சோதனைகளை நடத்தியுள்ளதாகவும், அதன் ஏழாவது அணு ஆயுத சோதனையை எந்த நேரத்திலும் நடத்த தயாராக இருப்பதாகவும் சியோல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# மேற்கிந்தியாவுடான தொடரை கைப்பற்றியது நியூசிலாந்து!

பிரிட்ஜ்டவுன், ஒக. 23

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான 3ஆவது ஒருநாள் போட்டியை வென்றதுடன் ஒருநாள் தொடரையும் கைப்பற்றியுள்ளது நியூசிலாந்து அணி.

மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1-1 என இரு அணிகளும் சமனில் இருந்த நிலையில் 3ஆவது ஒருநாள் ஆட்டம், பிரிட்ஜ்டவுனில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, நன்கு விளையாடி 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 301 ஓட்டங்கள் எடுத்தது.

தொடக்க வீரர் கைல் மேயர்ஸ் 105 ஓட்டங்களும் அணித் தலைவர் நிக்கோலஸ் பூரண் 91 ஓட்டங்களும் தொடக்க வீரர் ஷாய் ஹோப் 51 ஓட்டங்களும் எடுத்தார்கள். முதல் விக்கெட்டுக்கு ஷாய் ஹோப்பும் கைல் மேயர்ஸும் 173 ஓட்டங்கள் எடுத்து வலுவான தொடக்கத்தை அளித்தார்கள்.

முதல் விக்கெட்டை இழந்த பிறகு தடுமாறினாலும் கடைசி 13 பந்துகளில் 34 ஓட்டங்கள் எடுத்தார்கள் மே.இ. தீவுகளின் துடுப்பாட்ட வீரர்கள்.



நியூசிலாந்து அணி இலக்கை அபாரமாக விரட்டி 47.1 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 307 ஓட்டங்கள் எடுத்து 3ஆவது ஒருநாள் போட்டியையும் தொடரையும் வென்றது.

மார்ட்டின் குப்தில் 57, கொன்வே 56, ரொம் லதாம் 69, டரில் மிட்செல் 63, ஜேம்ஸ் நீஷம் 11 பந்துகளில் 4 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரியுடன் 34 ஓட்டங்கள் எடுத்தார்கள்.

ஆட்ட நாயகன் விருதை ரொம் லதாமும் தொடர் நாயகன் விருதை மிட்செல் சான்ட்னரும் வென்றார்கள். மேற்கிந்தியத் தீவுகளில் முதல்முறையாக ஒருநாள் தொடரை வென்றுள்ளது நியூசிலாந்து அணி.



## வெஸ்டர்ன் - சௌதேர்ன் ரென்னிஸ் இறுதியாட்டத்தில் குவிட்டோவா!

மசோன், ஒக. 23

வெஸ்டர்ன் அன்ட் சௌதேர்ன் ஓப்பன் மகளிர் ரென்னிஸ் போட்டியின் ஒற்றையர் இறுதிச் சுற்றுக்கு செக். குடியரசு வீராங்கனை பெட்ரா குவிட்டோவா முன்னேறியுள்ளார்.

அமெரிக்காவின் ஒஹியோ மாகாணம் மசோன் நகரில் வெஸ்டர்ன் அன்ட் சௌதேர்ன் ஓப்பன் ரென்னிஸ் போட்டி நடக்கிறது.

இதன் அரையிறுதிச் சுற்றில் அமெரிக்க வீராங்கனை மேடிசன் கீஸூம், செக் குடியரசு வீராங்கனை பெட்ரா குவிட்டோவாவும் மோதினர்.

இந்தப் போட்டியில் பெட்ரா குவிட்டோவா 6-7, 6-4, 6-3 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார். முதல் செற்றை மேடிசன் கீஸ் போராடி வென்றார்.

இருந்தபோதும் அடுத்த 2 செற்களிலும் சுதாகரித்து விளையாடிய பெட்ரா எளிதில் வெற்றி பெற்றார். இதையடுத்து அவர் இறுதிச் சுற்றுக்கு முன்னேறினார்.

இறுதிச் சுற்றில் பெட்ரா குவிட்டோவா, பிரான்ஸ் வீராங்கனை கரோலின் கார்சியாவை எதிர்த்து விளையாடவுள்ளார்.



## பிக் பாஷ் லீக்கில் பங்கேற்க 8 இலங்கையர்கள் பரிந்துரை!

கொழும்பு, ஒக. 23

அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள நடப்பு பருவகால பிக் பாஷ் லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கான வீரர்கள் தெரிவில் இலங்கை வீரர்கள் எட்டு பேர் உட்பட 19 நாடுகளைச் சேர்ந்த 279 வீரர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

தினேஷ் சந்திமால், துஷான் ஹேமந்த, பிரபாத் ஜெயசூரிய, ருவன்த கெலபொத்த, ரமேஷ் மெண்டிஸ், பானுக ராஜபக்ஷ, லக்ஷான் சந்தகன், மஹீஷ் தீக்ஷன ஆகியோரே பிக் பாஷ் தொடருக்கு பரிந்துரைக்கப்பட்ட இலங்கை வீரர்களாவர்.

தினேஷ் சந்திமால், பானுக ராஜபக்ஷ, பிரபாத் ஜயசூரிய, மஹீஷ் தீக்ஷன ஆகியோர் உள்ளூர் இருபது - 20 லீக் போட்டிகளில் பிரகாசித்து வந்துள்ளனர். அத்துடன், மஹீஷ் தீக்ஷன இந்த வருடம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக ஐ. பி. எல். தொடரில் சிறப்பாக செயல்பட்டிருந்தார்.

மொத்தமாக பரிந்துரைக்கப்பட்டுள்ள 279 வீரர்களில் 100 பேர் புதியவர்களாவர். இலங்கை வீரர்கள் அனைவரும் முதல் தடவையாக பிக் பாஷ் லீக்குக்கு பரிந் துரைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஷாஹீன் அப்ரிடிக்கு பதில் முகமது ஹஸ்நைன் சேர்ப்பு

இஸ்லாமாபாத், ஒக. 23

ஆசியக் கிண்ணம் இருபது -20 போட்டியிலிருந்து விலகிய சாஹீன் அப்ரிடிக்குப் பதிலாக பாகிஸ்தான் அணியில் புதிய வீரர் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஆசியக் கிண்ணப் போட்டி இம்முறை இருபது - 20 தொடராக நடக்கவுள்ளது. ஐக்கிய அரபு எமிரேட்ஸில் எதிர்வரும் 27 ஆம் திகதி இந்தத் தொடர் ஆரம்பமாகிறது.

28ஆம் திகதி நடக்கும் போட்டியில் பாகிஸ்தான் - இந்திய அணிகள் மோதவுள்ளன. காயம் காரணமாக இந்தத் தொடரிலிருந்து ஷாஹீன் அப்ரிடி விலகியுள்ளார்.

இலங்கையில் டெஸ்ட் தொடரில் விளையாடிய போது ஷாஹீன் அப்ரிடிக்கு முழங்காலில் காயம் ஏற்பட்டது. அந்தக் காயம் இன்னும் குணமாகாததால் ஆசியக் கிண்ணத்தில் மட்டுமல்லாமல் இங்கிலாந்துத் தொடரிலிருந்தும் அவர் விலகியுள்ளார்.

இந்நிலையில் சாஹீன் அப்ரிடிக்குப் பதிலாக பாகிஸ்தான் அணியில் முகமது ஹஸ்நைன் சேர்க்கப்பட்டுள்ளார். 22 வயது ஹஸ்நைன், 8 ஒருநாள், 18 இருபது - 20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.







## பிரக்ஞானந்தா மீண்டும் கார்ல்சனை வீழ்த்தினார்!

மியாமி, ஒக. 23

ஆறு மாதங்களில் மூன்றாவது முறையாக உலக சதுரங்க சம்பியனான மேக்னஸ் கார்ல்சனை வீழ்த்தியுள்ளார் இந்திய கிராண்ட்மாஸ்டர் பிரக்ஞானந்தா. எனினும், அவர் சம்பியன் பட்டத்தைத் தவறவிட்டார்.

நடப்பு எவ். ரி. எக்ஸ் கிரிப்டோ கிண்ணப் போட்டியில் ரவுண்ட் ரொபின் முறையில் நடந்தது. இதன் 7ஆவது சுற்றில் பிரக்ஞானந்தா, கார்ல்சனை எதிர்கொண்டார்.

சமநிலை தவிரப்பு முறையில் இந்த ஆட்டத்தை பிரக்ஞானந்தா வென்றார். இதற்கு முன்னர் கடந்த பெப்ரவரி மற்றும் மே மாதங்களில் கார்ல்சனை அவர் வென்றிருந்தார்.

இருப்பினும் அதிக புள்ளிகள் பெற்ற காரணத்தால் கார்ல்சன் எவ். ரி. எக்ஸ் கிரிப்டோ கிண்ணத்தை வென்றார். இந்த தொடரில் பிரக்ஞானந்தா இரண்டாம் இடம் பிடித்துள்ளார்.

இந்தத் தொடரை வரிசையாக நான்கு வெற்றிகளுடன் பிரக்ஞானந்தா தொடங்கியிருந்தார். லெவன் அரோனியன், அலீரேசா, அனிஷ் கிரி, ஹான்ஸ் நீமென் போன்ற வீரர்களை அவர் அடுத்தடுத்து வென்றிருந்தார். இருப்பினும் சீனாவின் குவாங் லீம் லீ மற்றும் போலந்தின் ஜான்-கிரிஸ்டோஃப் டுடா ஆகியோருக்கு எதிரான போட்டியில் அடுத்தடுத்து தோல்வியை தழுவினார். இந்நிலையில், ஏழாவது சுற்றில் கார்ல்சனை அவர் வீழ்த்தியுள்ளார்.

# அறவழி போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது பயங்கரவாதச் சட்டத்தை பிரயோகிக்கவேண்டாம்

## அரசிடம் கோருகின்றார் ரிஷாத் பதியுதீன் எம்.பி.



**கொழும்பு, ஒக. 23**

**அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே உள்ளிட்டவர்கள் கைது செய்யப்பட்டு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்படுவதற்கான செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிப்பதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

கடந்த 30 வருட யுத்தத்தின்போது, யுத்தத்தில் ஈடுபட்டவர்கள் மாத்திரமன்றி, அப்பாவி தமிழ் இளைஞர்கள் பலரும் இப்பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, எவ்வித விசாரணைகளுமின்றி அநியாயமாக நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள்.

அதேபோன்று, ஈஸ்டர் தாக்குதலின் பிற்பாடு, அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள், உலமாக்கள், புத்திஜீவிகள், அரசியல் தலைவர்கள் என முஸ்லிம்களை குறிவைத்து இச்சட்டம் பிரயோகிக்கப்பட்டது.

தற்போது, நாட்டினை நாசமாக்கிய ஆட்சியாளருக்கு எதிராக போராடிய சிங்கள, தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் மீது இச்சட்டம் பிரயோகிக்கப்படுவதற்கான எத்தனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அப்பாவி தமிழ் இளைஞர்கள் மீது பயங்கரவாத தடைச் சட்டம் பிரயோகிக்கப்பட்ட போது, ஏனைய சமூகத்தவர்கள் அதற்கு எதிராக போதுமான அளவில் கைகோர்க்க முன்வந்திருக்கவில்லை.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள், உலமாக்கள், புத்திஜீவிகள் மற்றும் அரசியல் தலைவர்கள் மீது இச்சட்டம் பிரயோகிக்கப்பட்டபோது, பெரும்பான்மை சமூகத்தவர்கள் போதுமான அளவில் அதற்கெதிராக கைகோர்க்க முன்வந்திருக்கவில்லை. ஆனால், இன்று இந்நிலமையில் பாரிய மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது.

பயங்கரவாத தடைச் சட்டம் இந்த நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட காலம் முதல், பயங்கரவாதத்துக்கு எதிராக அது பயன்படுத்தப்பட்டதை விடவும் அரசியல் உள்நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களே அதிகம் என்பது எல்லோருமே அறிந்த விடயம்.

நான் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்த போது, இன்றைய ஜனாதிபதி கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்கள், எனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக பாராளுமன்றத்திலே மிகவும் காத்திரமாக குரல் கொடுத்த ஒருவர் என்பதை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். அதேசமயம், அவ்வாறான ஒருவர் இன்று ஜனாதிபதியாக இருக்கின்ற நிலையில், அறவழிப் போராட்டக்காரர்களை அவரது கையொப்பத்துடன், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைப்பதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை எண்ணி மிகவும் வேதனையடைகின்றேன்.

இவ்வாறு பயங்கரவாத தடைச் சட்டத்தை ஜனநாயக ரீதியில், அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது பிரயோகிக்கின்ற பொழுது, தற்பொழுது நாடு எதிர்கொள்ளும் இக்கட்டான பொருளாதார நிலைமை இன்னும் மோசமடையும் என்பதை அச்சத்தோடு நினைவுகூற விரும்புகின்றேன்.

பயங்கரவாத தடைச் சட்டம் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து, இச்சட்டம் பயங்கரவாதிகளுக்கு எதிராக பயன்படுத்தப்பட்டதை விட அரசியல் தேவைகளுக்காகவே அதிகமாக பிரயோகிக்கப் பட்டிருக்கின்றது. எனவே, இப்பயங்கரவாத தடைச் சட்டம் இந்த நாட்டின் சட்டங்களிலிருந்து ஒழிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றேன். அது மாத்திரமின்றி, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே உள்ளிட்டவர்களை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் வன்மையாகக் கண்டிக்கிறேன்-என்றுள்ளது. (அ)

# காவலராக மாறி நாட்டை கட்டியெழுப்பும் பொறுப்பை சுமக்கிறார் ஜனாதிபதி ரணில்

## தம்மரத்ன நாயக்க தேரர் பாராட்டு

கொழும்பு, ஒக. 23

"ஒரு விடயம் நடக்க வேண்டுமாயின் தகுதியானவர்களுக்கே அது வழங்கப்பட வேண்டும் என்ற வார்த்தைகளை உறுதிப்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இன்று இந்த நாட்டின் காவலராக மாறி கட்டியெழுப்பும் பொறுப்பை சுமந்து வருகின்றார். தூர நோக்குடன் செயற்படும் தலைவர் என்ற வகையில் இந்த நாட்டின் பொறுப்பை ஏற்றுள்ள ஜனாதிபதி ரணில், நிச்சயம் நாட்டைக் கட்டியெழுப்புவார்."

-இவ்வாறு மிஹிந்தலை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி கலாநிதி வண. வலவாஹெங்குனவெவே தம்மரத்ன நாயக்க தேரர் தெரிவித்தார்.



மிஹிந்தலை புனிதத் தளத்துக்கு ஜனாதிபதி பயணம் மேற்கொண்டு சமய வழிபாடுகளில் ஈடுபட்டு ஆசிர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்.

இங்கு அனுசாசன உரை நிகழ்த்திய கலாநிதி வண. வலவாஹெங்குனவெவே தம்மரதன நாயக்க தேரர்,

ஒரு விடயம் நடக்கவேண்டுமாயின் தகுதியானவர்களுக்கே அது வழங்கப்பட வேண்டும்' என்று ஹூனுவடயே கதையில் கூறப்படுகின்றது. அன்று பல ஊடகங்களும் அரசியல்வாதிகளும் உங்களின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தினர். தெற்கே போய் பயங்கரவாதி என்கிறார்கள், நாட்டை ஆட்சி செய்த ஆட்சியாளர்களே அவ்வாறு கூறினார்கள். அதேபோன்று, பல அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் இருந்தன. 'ரணிலால் முடியாது' என்று கூறிய அந்தக் கருத்தை 'ரணிலுக்கு ஜனாதிபதி பதவி வழங்க வேண்டும்' என்று கூறி, அன்று நமது மங்கள சமரவீர அதனைத் திருத்தி முன்வைத்தார். இவரைப்போலவே ஸ்ரீபதி சூரிய ஆரச்சி உட்பட இன்னும் பலர் இருக்கிறார்கள்.

1989 ஆம் ஆண்டில் எல்.ரீ.ரீ.ஈ. ஒரு பக்கம், இன்னொரு பக்கம் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) என்பன செயற்பட்டன. டிரான்ஸ்போர்மர்கள், தொழிற்சாலைகள் அனைத்தும் தீப்பிடித்து எரிந்தன. மறுபுறம் குண்டுகள் வெடித்தன. ஆனால், அந்த நேரத்தில் கூட, நாடு இத்தகைய அழுத்தங்களுக்கோ, இவ்வளவு கடினமான சூழ்நிலைக்கோ தள்ளப்படவில்லை.

இன்று, ஒரு பக்கம், கொரோனா தொற்று, மறுபக்கம், அரசியல் ஸ்திரமின்மை. அதே போல் இனவாதம், மதவாதம் அனைத்தும் உள்ளன. நாடு இருந்தாலும், இறுதியில் நாட்டில் சட்டம் இல்லாமல் போனதை நாம் அறிவோம்.

பொலிஸாரின் வாகனங்களைப் போதைப்பொருள் பயன்படுத்தியவர்கள் சோதனை செய்கின்றனர். சட்டத்தை தனிநபர்கள் கையில் எடுத்தனர். பொலிஸாரை அடிக்க ஆரம்பித்தனர். ஆயுதங்கள் திருடப்பட்டன. இதுபோன்ற பல்வேறு விடயங்களைச் செய்தார்கள்.

இறுதியில், ஒரு வரம் போல் இந்த நாட்டுக்கு நல்லது செய்ய முன் வந்தீர்கள். உங்கள் வீடு கூட ரோயல் கல்லூரிக்கு எழுதப்பட்டுள்ளது. உலகத்திலோ அல்லது இலங்கையிலோ உங்களுக்கு வேறு ஒரு அங்குல நிலம் கூட இல்லை. இருந்தவையும் பல்கலைக்கழகங்களுக்கும் நிறுவனங்களுக்கும் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட ஒரு தன்னல மற்ற குணம் கொண்டவர் தான் நமது ரணில்.

கடந்த காலங்களில் அவர் கூறியவற்றை மக்கள் ஏளனமாகப் பேசினர். நகைப்புக்கு உள்ளாக்கினர். ஆனால், கடைசியில், இந்த கடினமான நேரத்தில் தண்டவாளத்தில் தலையை வைத்தது போல ஒரு செயலைச் செய்ய வேண்டியதாயிற்று. பிரதமர் பதவியை ஏற்றார், ஜனாதிபதி பதவியையும் ஏற்றுக்கொண்டார். ஏனையோருக்கும் ஜனாதிபதிப் பதவியை ஏற்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. ஆனால் யாரும் ஏற்க முன்வரவில்லை.

என்ன கூறினாலும் கடைசியில் அரச பதவியைப் பெறுவதற்கும் புண்ணியம் செய்திருக்க வேண்டும். இந்த நாட்டைப் பொறுப்பேற்கவும், இந்த மாபெரும் புனித பொக்கிசங்களுக்கு பொறுப்பாக இருப்பதற்கும், பல்வேறு மதங்கள் மற்றும் வெவ்வேறு இனங்கள் அனைத்தையும் பொறுப்பேற்கக் கிடைப்பதும் ஒரு அதிர்ஷ்டம்-என்றார். (அ)

**உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்**

துயர் .நெற் THUYAR.NET

**துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்**

ஈழநாடு Eelanadu

**ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்**

DAN NEWS

**டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்**

விபரங்களுக்கு: thuyar.net Tel: 0094 752 225 225

## நல்லூர்....

வருகை அதிகரித்துள்ளது.

ஆலயத்துக்கு நேர்த்திக் கடன்களை செய்வதற்காக வருகின்ற தூக்குக் காவடிகள் அனைத்தும் ஆலயத்தின் முன்புறமாக - பருத்தித்துறை வீதி வழியாக மட்டுமே உள்நுழைய முடியும். அவ்வாறு வருகின்ற காவடிகள் இறக்கப்பட்டதும், வாகனங்கள் அனைத்தும், செட்டித்தெரு வீதி வழியாக வெளியேறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

கொரோனா எச்சரிக்கை காணப்படுவதால் பக்தர்கள் தன்னெழுச்சியாக சுகாதார விதிமுறைகளை பின்பற்ற வேண்டும். திருட்டுச் சம்பவங்களை தவிர்க்க நல்லூர் ஆலயச் சூழலில் யாழ். மாநகர சபையால் கண்காணிப்பு கமெராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. எனினும், பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

ட்ரோன் கமெராக்களை பயன்படுத்தி காணொலி பதிவுசெய்ய முடியாது. மீறினால், அந்தக் கமெராக்கள் பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். நல்லூர் ஆலயப்பகுதியை சூழ உள்ள கட்டுப்பாடுகள் வீதி தடைகள் தொடர்ந்தும் காணப்படும். இதனைப் பொது மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அடியவர்கள் அங்கப் பிரதட்சணம் செய்யும் ஆலய சுற்று வட்டத்தில், சிலர் கச்சான் கோது, மிகுதி உணவுடன் வீசப்பட்ட பைகள் என்பவற்றை போட்டு செல்கின்றனர். இதனைத் தவிர்க்க வேண்டும்.

யாழ். மாநகர சபையின் விசேட அணி ஒன்று வீதி ஒழுங்குகளை கண்காணிக்கும். இதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும். நீல உடை அணிந்த மாநகரசபை ஊழியர்கள் மீண்டும் பணியில் ஈடுபடுவார்கள் - என்றார்.

முன்னதாக, யாழ். மாநகர சபை அறிமுகப்படுத்திய இந்த நீல நிற உடை விடுதலைப் புலிகளின் காவல்துறை உடையைப் போன்றிருப்பதாக சர்ச்சை எழுந்தது. இதைத் தொடர்ந்து பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், பின்னர் இந்த சட்ட நடவடிக்கைகள் பலத்த போராட்டத்தின் பின்னர் கைவிடப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.(ஐ-3)

## அம்பாந்தோட்டை....

மேற்கொள்ளும் நோக்கில் கடந்த 11ஆம் திகதி இலங்கை வருவதாக இருந் தது.

இதற்கு இந்திய தரப்பில் எழுப்பப்பட்ட, எதிர்ப்புகளால் இதன் அம்பாந்தோட்டைக்கான பயணம் ஒத்திவைக்கப்பட்டு கடந்த 16ஆம் திகதி அம்பாந்தோட்டை துறைமுகத்தை அடைந்தது. கடந்த 7 நாட்களாக அங்கு தரித்து நின்ற கப்பல் நேற்று மாலை புறப்பட்டது. (ஐ)

## பயங்கரவாத....

தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். பின்னர், பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலின் கீழ் மூவரும் நேற்று முன்தினம் குற்றப் புலனாய்வு பிரிவினரிடம் (சி. ஐ. டி.) ஒப்படைக்கப்பட்டனர்.

இந்நிலையில், அவர்கள் பயங்கரவாத செயல்பாடுகளுடன் தொடர்புடையவர்கள். எனவே, அவர்களை பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரிக்க அனுமதிக்குமாறு ஜனாதிபதியை பாதுகாப்பு அமைச்சு கோரியது. இந்தக் கோரிக்கைக்கு நேற்று அனுமதியளிக்கப்பட்டது. இதன்படி, கைதானவர்கள் 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை, கைதானவர்களை பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரிக்கும் உத்தரவில் கையொப்பமிட வேண்டாம் என்று ஜனாதிபதியை ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் அறிக்கையாளர் கோரியிருந்தார். இவ்வாறான கோரிக்கைகள் புறந்தள்ளப்பட்டமை இலங்கைக்கு பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தலாம் என்று கருதப்படுகின்றது. (ஐ)

# அரசியல் கைதிகள் விடுதலை; ஏமாற்ற முயல்கிறதா அரசாங்கம்?

## குரலற்றோரின் குரல் அமைப்பு சந்தேகம்

யாழ்ப்பாணம், ஓக. 23

அண்மைக்காலத்தில் சமூக வலைத்தளங்களில் மாவீரர்கள், தேசிய தலைவரின் படங்களை பகிர்ந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைதானவர்களை பிணையில் விடுவித்து அரசியல் கைதிகளை விடுவிப்பதான மாயத் தோற்றம் ஏற்படுத்தப்படுகிறதா என்ற சந்தேகம் எழுவதாக "குரலற்றவர்களின் குரல்" அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு. கோமகன் தெரிவித்துள்ளார்.

மேலும், பத்து வழக்குகளில் 22 பேரும், தண்டனை விதிக்கப்பட்டவர்கள் மேன்முறையீடு செய்தவர்கள் என 24 பேருமாக மொத்தம் 46 தமிழ் அரசியல் கைதிகள் காணப்படுகின்றனர். இதில் பெண் அரசியல் கைதி ஒருவரும் உள்ளடங்குகின்றார்.

நீதி அமைச்சர் தெரிவித்ததாக அரசியல் கைதிகளில் ஒரு பகுதியினர் தற்போதைக்கு விடுதலை செய்யப்படவுள்ளனர் என்று ஊடகங்களூடாக அறிய கிடைத்துள்ளது. இந்த விடயத்தில் எமக்கு பெரும் சந்தேகம் எழுகிறது.

இந்த வருடம் ஏப்ரல் மாதம் புதிய மகஸின் சிறைச்சாலைக்கு சென்ற ஜனாதிபதியின் ஆலோசனை சபையின் தவிசாளர் நீதியரசர் அசோக டீ சில்வா, சொலிசிட்டர் ஜெனரல் சுசுத கம்லத் ஆகியோர் பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களையும் வழக்குத் தாக்கல் செய்யப்படாதவர்களின் விடுதலை தொடர்பாக ஆராயவே தமக்கு உரித்துள்ளதென அரசியல் கைதிகளிடம் தெரிவித்துள்ளனர்.

தண்டனை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் தொடர்பாக முடிவெடுக்கும் அதிகாரம் தங்களிடம் இல்லை என்று தமிழ் அரசியல் கைதிகளுக்கு தெரியப்படுத்தி இருக்கின்றார்கள்.

இந்தக் கூற்று எமக்கு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது.

அண்மைக்காலத்தில் சமூக வலைத்தளங்களில் மாவீரர்கள், தேசிய தலைவரின் படங்களை பகிர்ந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைதானவர்களை பிணையில் விடுவித்து அரசியல் கைதிகளை விடுவிப்பதான மாயத் தோற்றம் ஏற்படுத்தப் படுகிறதா என்ற சந்தேகம் எழுகிறது - அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

ஜனாதிபதி நினைத்தால் நிச்சயமாக 46 தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய முடியும். இந்த விடயங்களை கருத்தில் கொண்டு பாதிக்கப்பட்ட பெற்றோர்களின் கண்ணீரை துடைப்பதற்கு இருக்கின்ற வழிமுறைகளை பயன்படுத்தி தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் - என்று நேற்று அரசியல் கைதிகளின் உறவினர்களுடன் இணைந்து நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கோமகன் தெரிவித்தார்.

# போக்குவரத்து சேவைகளை ஒழுங்குபடுத்த நடவடிக்கை!

கொழும்பு, ஓக. 23

ஓட்டோக்கள் உட்பட அனைத்து பயணிகள் போக்கு வரத்து சேவைகளையும் ஒழுங் குபடுத்தும் அதிகாரத்தை இலங்கை போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு வழங்குவ தற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள் ளார். கட்டண நிர்ணயம் உள் ளிட்ட போக்குவரத்து சேவை களுக்கான ஒழுங்குமுறை நட வடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான சட்டங்களில் திருத்தம் செய்வதற்கும் அமைச் சரவை ஒப்புதல் அளித்துள்ள தாக அமைச்சர் கூறினார். (அ)

## ஜனாதிபதிக்கு....

உரிமைகள் பேரவையின் 51 ஆவது அமர்வில் நாட்டை மிகவும் கடினமான சூழ் நிலைக்கு தள்ளக்கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் நடந்துகொண்டிருக்கும் பேச்சுவார்த்தைகளையும், ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்கப்படும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையையும் இது பாதிக்கக்கூடும் என்றும் ஜி.எல்.பீரிஸ் கூறியுள்ளார்.

இதேவேளை சர்வதேச சமூகம் தற்போதைய நிலைமையை உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும், அனைவரையும் ஏமாற்ற முடியாது என்றும் ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு அனைத்து அரசியல் கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்கு அரசாங்கம் தவறியமை ஆளும் கட்சியின் நெருக்கடியை எடுத்துக்காட்டுவதாக ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார். (அ)

## மக்களின்....

ஈடுபட்ட அனைத்துப் பல் கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் வசந்த முதலிகே, செயல் பாட்டாளர் ஹஷந்த ஜீவந்த குணதிலக்க மற்றும் கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகி யோரை பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் விசாரிக்க ஒப்புதல் அளிக்கப்பட் டது. இது தொடர்பிலேயே அமெரிக்க தூதுவர் ஜூலி சங் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், மக்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமையை உறுதிப்படுத்துமாறு அரசாங்கத்தை கேட்கிறோம் என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

# வீரவன்ஸ, வாசு, கம்மன்பில மன்னிப்பு கோரவேண்டும்!

## சம்பிக்க ரணவக்க வலியுறுத்து

கொழும்பு, ஓக. 23

விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில உட்பட சுயாதீன அணி உறுப்பினர்கள் நாட்டு மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க வலியுறுத்தினார்.

விமல், உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார உள்ளிட்டவர்கள் இணைந்து எதிர்வரும் 4 ஆம் திகதி உருவாக்கவுள்ள புதிய அரசியல் கூட்டணி தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

"ராஜபக்ஷக்களை லீகுவான் எனவும், மீட்பார்கள் எனவும் பரப்புரைகளை முன்னெடுத்து மக்களை ஏமாற்றியதில் பெரும் பங்கு அவர்களுக்கும் உள்ளது. எனவே, நாடு இந்நிலைமைக்கு வருவதற்கு அவர்களும் காரணம்.

சுயாதீனமாக செயற்படும் உரிமை அவர்களுக்கு உள்ளது. ஆனால் நாட்டில் ஏற்பட்ட நிலைமைக்கு பொறுப்புக்கூற வேண்டும்." - எனவும் சம்பிக்க குறிப்பிட்டார். (அ)

## இலங்கையின்....

ஆராய்ந்து வருகின்ற தருணத்தில் பயங்கரவாத தடைச் சட்டம் பயன்படுத்தப்படுவதாக வெளியாகும் தகவல்கள் கவலையளிக்கின்றன", என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

## அரசை....

ஒருமித்த கருத்துக்கான கதவுகளை மூடிவிடும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக நாடு எதிர்நோக்கும் பாரிய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளும் புரிந்துணர்வோடு அதனைக் கையாள்வது மிகவும் அவசியம் என்றும் கரு ஜயசூரிய குறிப்பிட்டார். (அ)

## இந்திய....

மீனவர்களே முல்லைத்தீவுக் கடல் பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த வேளை நேற்றுப் பகல் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட 10 மீனவர்களையும் அவர்கள் பயணித்த விசைப் படகுடன் திருகோணமலைத் துறைமுகத்துக்குக் கடற்படையினர் கொண்டு சென்றனர்.

10 மீனவர்களும் விசாரணைகளின் பின்னர் பொலிஸார் ஊடக இன்று செவ்வாய்க்கிழமை திருகோணமலை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று கடற்படை தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதி....

மேலும், ஐக்கிய மக்கள் சக்தியினருக்கு ஒதுக்கப்பட்ட அமைச்சு பதவிகளை ஏற்று அரசாங்கத்துடன் இணையுமாறு இதன்போது எதிர்க்கட்சி தலைவரிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரினார் என்றும் கூறப்பட்டது.

எனினும், இந்த வாய்ப்பை எதிர்க்கட்சி தலைவர் நிராகரித்து விட்டார். ஆனாலும், ஐக்கிய மக்கள் சக்தி சர்வகட்சி அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் என்று ஜனாதிபதியிடம் எதிர்க்கட்சி தலைவர் உறுதியளித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## புலம்பெயர்....

சுற்றுலாத்துறை தொடர்பான விடயங்களை இந்தப் பணிமனை கையாளும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், புலம்பெயர் பணிமனை ஒருங்கிணைப்புக்கான மத்திய நிலையமாக காணப்படும். இது, புலம்பெயர் பிரிவுகளுடன் ஒருங்கிணைப்பதற்கும் இலங்கை தொடர்பில் அவர்களுடன் ஈடுபாடுகளை ஏற்படுத்துவதற்குமானது. குறிப்பாக, முதலீடுகள் மற்றும் ஏனைய விவகாரங்கள் தொடர்பிலானது. இது முதலீட்டுக்கானதாக மாத்திரம் காணப்படாது சுற்றுலாத்துறை குறித்தும் கவனம் செலுத்தும்.

புலம்பெயர் பணிமனை புலம்பெயர் தமிழர்களை குறித்து மாத்திரம் கவனம் செலுத்துவதாக இருக்காது. இந்தப் பணிமனை குறித்து எதிர்வரும் வாரங்களில் நாங்கள் ஆராயவுள்ளோம். எனினும் இது குறிப்பிட்ட இனம் ஒன்றுகானதாக மட்டுப்படுத்தப்பட்டதாக மாத்திரம் காணப்படாது - என்றும் சொன்னார். (ஐ)

ஈழநாடு
Eelanadu



## ஒரு கோடி ரூபாய்க்கும் மேலான போதைப் பொருளுடன் இருவர் கைது!

புத்தளம், ஓக. 22

ஒரு கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய ஐஸ் போதைப் பொருளை கைப்பற்றிய பொலிஸார், இதனுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் இருவரை கைது செய்துள்ளனர்.

புத்தளம் - கற்பிட்டி பகுதியில் விற்பனை செய்வதற்காக பொதி செய்து கொண்டிருந்தவேளை பொலிஸார் நடத்திய சுற்றி வளைப்பிலேயே இந்தப் போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன. இதன்போது சுமார் 800 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கற்பிட்டி பகுதியைச் சேர்ந்த இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப்பொருள் இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாகக் கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப்பொருள் சுமார் ஒரு கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியானது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடம் விசாரணை இடம்பெறுவதாகவும் அவர்களை நீதிமன்றில் முற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் பொலிஸார் கூறினர். (ஐ)

## பசு மாடு உதைத்ததில் முதியவர் ஸ்தலத்தில் பலி!

மட்டக்களப்பு, ஓக. 22

பால் கறந்தபோது பசு மாடு உதைத்ததில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு - வெல்லாவெளி - களுதாவளையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

இதில், அதே இடத்தைச் சேர்ந்த நாகமணி பாக்கியராசா (வயது 69) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

முதியவர் வழக்கம்போன்று வளர்ப்பு பசுவில் பால் கறந்துள்ளார். திடீரென்று பசு அவரின் நெஞ்சில் காலால் உதைத்ததில் அவர் சம்பவ இடத்திலேயே வீழ்ந்து உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

## சகல பல்கலைக்கழகங்களையும் செப்ரெம்பருக்குள் திறக்க முடிவு

கொழும்பு, ஓக. 23

அனைத்து பல்கலைக்கழகங்களும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்திற்குள் மீள ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக பல்கலைக்கழகங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் மூடப்பட்டிருந்தன.

இந்நிலையில், தற்போதைய நிலை தொடர்பில் ஆராய்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## பிரான்ஸில் போராட்டங்களை ஏற்பாடு செய்தவர் கைதானார்!

கொழும்பு, ஓக. 22

கோட்டா கோ கம போராட்டங்களை பிரான்ஸ் நாட்டில் நடத்த ஏற்பாடு செய்த நபர் இலங்கை வந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அர்ஜூன அமடொரு என்ற பிரான்ஸ் குடியுரிமை பெற்ற நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் தனது குடும்ப அங்கத்தவர்களை சந்திப்பதற்காக இலங்கை வந்த நிலையில் நிட்டம்புவை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ஐ)

# செப். 20ஆம் திகதியின் பின்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தல்!

### தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் அறிவிப்பு



கொழும்பு, ஓக. 22

**உள்ளூராட்சி தேர்தலை நடத்துதல் மற்றும் காலம் தாழ்த்துதல் குறித்த அதிகாரங்கள் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட வேண்டும். எனவே, அது தொடர்பான சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ளுமா வலியுறுத்துகின்றோம். அத்துடன், செப்ரெம்பர் 20இற்குப் பின்னர் வெகுவிரைவில் உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சி ஹேவா தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் சனிக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேர்தல்களை நடத்துவதற்கே தேர்தல்கள் ஆணைக்குழு காணப்படுகிறது. எந்தவொரு தேர்தலையும் நடத்துவதற்கு சட்ட ரீதியாக எம்மிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டால் அதனை நடத்துவதற்கு நாம் தயாராகவே உள்ளோம்.

மாகாணசபை தேர்தல் நீண்ட காலமாக காலம் தாழ்த்தப்பட்டு வருகிறது. எனவே, அதனை விரைவில் நடத்த வேண்டும் என்று நாம் அரசியல் கட்சிகளிடம் வலியுறுத்தியிருக்கின்றோம்.

தெரிவுக்குழு சந்தர்ப்பங்களின் போதும் , இந்த தேர்தல் சட்டம் குறித்து நாம் கடுமையாக வலியுறுத்தியிருந்தோம். அதற்கமைய பாராளுமன்றத்தில் தற்போது பழைய முறைமையில் சிறு சட்ட திருத்தங்களுடன் தேர்தலை நடத்துவதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி தேர்தல்களும் காலம் தாழ்த்தப்பட்டுள்ளன. அமைச்சரால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, தேர்தலை காலம் தாழ்த்துவது தொடர்பில் அமைச்சருக்குள்ள அதிகாரத்தை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்குமாறு கோருகின்றோம்.

காரணம் அமைச்சரால் நன்மைக்காக தேர்தலை காலம் தாழ்த்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு அது அரசியல் நோக்கத்திற்காக என்றே தென்படும். எனவே தான் அந்த சட்டத்தில் மாற்றங்களை மேற்கொண்டு, அதிகாரத்தை ஆணைக்குழுவுக்கு வழங்குமாறு கோருகின்றோம். எதிர்வரும் மார்ச் மாதம் வரை உள்ளூராட்சி தேர்தல்கள் காலம் தாழ்த்தப்பட்டுள்ளன.

எவ்வாறிருப்பினும் எதிர்வரும் செப்ரெம்பர் 20 ஆம் திகதியின் பின்னர் தேர்தல் ஆணைக்குழுவுக்கு தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் கிடைக்கப்பெறும். அதற்கமைய விரைவில் தேர்தலை நடத்துவதற்கு ஆணைக்குழு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும் - என்றார். (ஐ)

## பயங்கரவாத தடைச் சட்டத்தை அரசாங்கம் பயன்படுத்தக்கூடாது

### சர்வதேச மன்னிப்பு சபை வலியுறுத்து

புதுடிலில்லி, ஓக. 22

ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக மிகவும் கொடூரமான பயங்கரவாத தடைச் சட்டத்தை அரசாங்கம் பயன்படுத்தக்கூடாது என சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்ற தகவலால் ஆழ்ந்த கவலையடைந்துள்ளதாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்களிற்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தவேண்டாம் என வேண்டுகோள் விடுத்துள்ள சர்வதேச மன்னிப்புச் சபை மாறாக அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை கைவிட வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்களை தன்னிச்சையாக கைதுசெய்வதும் அவர்களின் நடவடிக்கைளால் நியாயப்படுத்த முடியாத பாரிய குற்றச்சாட்டுகளை அவர்கள் மீது சுமத்துவதும் சர்வதேச சட்டத்திற்கு முரணாண விடயம் எனவும் சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது. (ஐ)

## பெரும்போகத்துக்கான உரம் யாழில் விநியோகம் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஓக. 22

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பெரும்போகத்துக்கு தேவையான உரத்தை விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று விவசாய அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் சிறுபோக செய்கை முன்னெடுக்கப்படாத நிலையில் பெரும்போக செய்கை ஆரம்பமாகவுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அபிவிருத்தி பணிப்பாளர் நாயகம் எம். எல். அபேரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன், சிறுபோகத்தில் நெல் செய்கைக்குத் தேவையான உரத்தை விநியோகிக்கும் நடவடிக்கைகள், தற்போது பூர்த்தியடைந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே, இந்திய கடன் வசதியின் கீழ் நாட்டிற்கு கிடைத்துள்ள 21,000 மெட்ரிக் தொன் யூரியா உரத்தை, தேயிலை மற்றும் இஞ்சி செய்கைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிறுதேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபையூடாக, தேயிலை செய்கையாளர்களுக்கான உர விநியோகம் முன்னெடுக்கப்படுகின்றது. (ஐ)

## கோழி இறைச்சிக்கும் விலை நிர்ணயிக்க முடிவு

கொழும்பு, ஓக. 22

கோழி இறைச்சிக்கான கட்டுப்பாட்டு விலையை விதிக்க அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. இது தொடர்பான இறுதித் தீர்மானம் இந்த வாரத்தில் எட்டப்படும் என வணிக, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், கோழிப் பண்ணையாளர்கள் விலையைக் குறைக்க ஒப்புக்கொண்டால், கட்டுப்பாட்டு விலை அவசியமில்லை என்று அவர் கூறினார்.

கடந்த இரண்டு வாரங்களில் பல அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் தெரிவித்தார்.

இதன்படி, பருப்பு, உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய் மற்றும் பல நுகர்பொருட்களின் மொத்த விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. சில்லறை விலை எதிர்வரும் நாட்களில் குறையும்.

இதேவேளை, கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் முட்டைக்கான ஆகக்கூடிய சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டு வர்த்தமானி வெளியிடப்பட்டது.

அதன்படி, வெள்ளை முட்டைக்கு 43 ரூபாயும், சிவப்பு முட்டைக்கு 45 ரூபாயும் அதிகபட்ச சில்லறை விலையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

முன்னதாக 60 ரூபாயை விட அதிகமான விலையில் முட்டை விற்பனை செய்யப்பட்டமையை அடுத்து கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்டது.

இருப்பினும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கோழி முட்டை 60 ரூபாயாக அல்லது இதற்கும் அதிகமான விலையிலேயே விற்பனை செய்யப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.08.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



06.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் யாழ் பாவாணன்



7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர் - மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை
**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - தர்மபிரபு,வலிமை
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ் - வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்
**இரவு**
7.00 மணி : கதை நேரம் - நகைச்சுவை நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை - இலக்கிய நிகழ்ச்சி



10.00 மணி : BLACK AND WHITE

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : உ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஞ டிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு